www.tamilarangam.net

# நவசகாப்தம்

**4**






[illegible]

தெற்கிலிருந்து திரும்பிய மனிதா!
கிழக்கிலிருந்து தோன்றிய மனிதர்!
கேளீர்! இதன்னைக்கேளீர்’ இதனை
வடக்கேயிருந்து வந்துள்ள உனக்கும்
தெற்கேயிருந்து திரும்பிய உனக்கும்
கிழக்கேயிருந்து தோன்றிய உனக்கும்
கிளர்ந்துள்ள பிரச்னை ஒன்றே! ஒன்றே!!
நீங்கள் மூவரும் உழைக்கும் மக்கள்
நீங்கள் மூவரும் கஷ்டப்படுவோர்
நீங்கள் மூவரும் துயரமுடையீர்!
நீங்கள் மூவரும் தீன்பம் என்ற
வாடைக் காற்றிற் துவண்டுள்ளீர் அறிவீர்!
காலையிற் கழனியிற் இறங்கி உழைத்தும்
கடற்கரைகென்றே கனமீன் கொணர்ந்தும்
ஆலைகள் தோறும் வியர்வை வரத்தும்
ஐய! நீர் மூவரும் கண்டது என்ன?
மூவருக்கும் உழைப்பும் ஒன்றே
மூவருக்கும் பிரச்சனை ஒன்றே
மூவரும் உங்கள் எதிர்காலத்தையும்
மூவரும் நும் மக்கள் எதிர்காலத்தையும்
எண்ணி எண்ணி ஏங்குகிறீர் அறியேன்.

மௌனகுரு

வெளியீடு : பாட்டாளி வர்க்க முன்னணிக் கழகம் (ப்ரொவா) இலங்கை Rs 7/-
நன்கொடை : ரூபா..............

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''நடுநிலை'' என்று அறியப்படுவது சமூக தேசிய வெறியர்களுக்கும் உண்மையான சர்வ தேசியவாதிகளுக்கிடையே ஊசலாடும் நபர்கள் இதில் அடங்குவர்.

இந்த ''நடுநிலை''யாளர்கள் எல்லோரும் தாங்களும் மார்ச்சியவாதிகள் என்றும் சர்வ தேசியவாதிகள் என்றும் சப்தம் செய்து பறை சாற்றுகிறார்கள். மேலும் தங்கள் சமாதானத் திற்காக நிற்பதாகவும் அரசாங்கங்கள் மீது எல்லா வகையிலும் ''நிர்ப்பந்தம்'' கொண்டுவர வேண்டும் என்றும், ''சமாதானத்திற்காக மக்களின் சித்தத்தை'' ஒவ்வொரு அரசாங்கமும் அறிய முற்படவேண்டும் என்று கௌரவமான ''கோரிக்கைகள் முன்வைக்கப்பட'' வேண்டும் என்றும், எல்லாவகையான சமாதான இயக்கத்தையும் பிரதேசக்கைப்பற்றல் இல்லாத சமாதானத்தையும் இன்ன பிறவற்றையும் ஆதரிப்பதாகவும் பறைசாற்றுகிறார்கள். அதே சமயத்தில் சமூகதேசிய வெறியர்களுடன் சமாதானம் செய்துகொள்வதை ஆதரிப்பதாகவும் அறிவிக்கிறார்கள், இந்த நடுநிலையாளர்கள்', ஒற்றுமைக்காக நிற்கிறார்கள்! பிளவை எதிர்க்கிறார்கள்.

''நடுநிலை''யாளர்களின் உலகம் தேன் தடவிய குட்டி முதலாளிகள் வாய்ச்சவடால்கள், சொல்லளவில் சர்வதேசியம், செயலில் கோழைத்தனமான சந்தர்ப்பங்களும், சமூக தேசிய வெறியர்களிடம் கெஞ்சிக் கூத்தாடுவதுமாகும்.

விடயத்தின் சாராம்சம் என்னவெனில் ''நடுநிலை''யாளர்கள் சொந்த அரசாங்கத்துக்கு எதிராக நாம் புரட்சி அவசியம் என்பதை மனமார ஏற்றுக் கொள்ளவில்லை: அவர்கள் புரட்சிக்காக பிரச்சாரம் செய்யவில்லை; முழுமனத்துடன் புரட்சிகர போராட்டத்தை தட்டி கழிக்க மிகவும் சலிப்பைதரும் அதீவுமார்ச்சியம் போல் ஒளிக்கும் சரக்குப் போக்குகளை கையாளுகிறார்கள்.

சமூக தேசிய வெறியர்கள் நம் வர்க்க விரோதிகள்; தொழிலாளவர்க்க இயக்கத்துள் இருக்கும் முதலாளி வர்க்கத்தில் உள்ள ஒரு அடுக்கை, கூட்டத்தை அல்ல சில பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந்த அரசுக்கு, கூட்டம் அல்லது பிரிவுகள் மெய்யாகவே முதலாளி வர்க்கத்தால் (நல்ல ஊதியம், கௌரவப்பதவிகள் ஆகியவை மூலம்) லஞ்சம் கொடுத்து வாங்கப்பட்டவர்கள். இந்த அடுக்கை சேர்ந்தவர்கள் சிறிய மற்றும் பலகீனமான மக்களை கொள்ளையடிக்கவும் ஒடுக்கவும் தங்கள் சொந்த நாட்டு முதலாளிவர்க்கத்துக்கு துணை போகின்றனர்; முதலாளிய கொள்கையை பங்கு போட போராடும் தங்கள் சொந்த நாட்டு முதலாளிய வர்க்கத்தினருக்கு உதவுகின்றனர்.

இந்த ''நடுநிலை''யாளர்களின் சட்டத்துக்குட்பட்டு, இறுத்தல் என்ற புற்று நோயால் அடுக்கப்பட்டு, நாடாளுமன்ற சூழலால் களங்கப்பட்டு போய் நடைமுறை பொழுங்கை வழிபவர்களும், சொகுசான பதவிகளுக்கும் துன்பமில்லாத வேலைகளுக்கும் பழக்கப்பட்டு போன அதிகார ...வர்க்கத்தினரும் அடங்குவர். வரலாற்று ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பார்க்கும்போது இவர்கள் ஒரு தனி வேறான சமூக அடுக்கைச் சேர்ந்தவர்கள் அல்லர்; மாறாக் தொழிலாளிவர்க்க இயக்கத்தின் ஒரு பழைய சட்டத்தில் இருந்து ஒரு புதிய சட்டத்தை நோக்கி மாறும் ஓர் இடைக்கால நிலையை பிரதிநிதித்தத்துவப் படுத்துகின்றன.''

''சில சமயங்களில், தனி மனிதர்கள் சமூக—தேசிய வெறி நிலையில்'' இருந்து ''நடுநிலை''க்கும் அதேபோல் ''நடுநிலை''யில் இருந்து சமூக—வெற்றியைக்கும் தம்மையறியாமலே செல்வது இயல்பு. தனி மனிதர்கள் ஒரு வர்க்கத்தில் இருந்து மற்றொரு வர்க்கத்திற்கு சுதந்திரமாக செல்லக்கூடும் என்ற போதிலும். வர்க்கங்கள் ஒன்றுக்கொன்று தனித்து வேறுபட்டு நிற்பவை என்பதை ஒவ்வொரு மார்ச்சியவாதியும் அறிவர்: அதேபோல தனிமனிதர்கள் ஒரு போக்கிலிருந்து மற்றொரு போக்கிற்கு சுதந்திரமாக மாறக்கூடும் பெற்ற போதிலும், போக்குகளை ஒன்றினைப்பிற்கு முயற்சிகளும் ஆயத்தங்களும் இருந்தபோதிலும், அரசியல் வாழ்வில் போக்குகள் என்பன ஒன்றுக்கொன்று தனித்து வேறுபட்டு நிற்பவை என்பதையும் அவர்கள் அறிவர்.

தோழர் லெனின்
(பட்டாளிவர்க்க கட்சிக்கான நகல் செந்தமிழ்)

www.tamilarangam.net

# விழிப்புணர்வும் எச்சரிக்கையும்

இலங்கை மக்களின் சமூக-பொருளாதார அரசியல் விடுதலைக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகவும் போராடும் புரட்சிகரச் சக்திகள், மார்க்சீய - லெனினிய - மாவோ சிந்தனை வழிகளுக்கு எதிராக அவர்கள் மத்தியிலுள்ள திரிபுவாத சித்தாந்தப் போக்கையும், சிறுமுதலாளிய வர்க்க நடைமுறைகளையும் எதிர்த்து இடையறாத போராட்டத்தின் மூலம் மார்க்சீய-லெனினிய கட்சியைக் கட்டும் பணியில் முன்னேறி வருகிறார்கள்.

மார்க்சீய - லெனினிய - மாவோ சிந்தனையை தமது வழிகாட்டும் தத்துவமாக ஏற்றுக்கொண்டு செயல்படும் புரட்சிகரக் குழுக்கள் தமிழீழப் பகுதிகளில் எமக்குத் தெரிந்த வகையில் நான்குள்ளன. இக்குழுக்களின் உருவாக்க அடித்தளங்கள் வேறுபட்ட அரசியல் வரலாற்றுப் பின்னணிகளை கொண்டிருப்பது தெளிவாகும். ஒன்று, தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம், மார்க்சிய-லெனினிய கட்சியின் வழிகாட்டுதலில் முன்னெடுக்கப்-படுவதே இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில் சரியானது என்ற கொள்கையில் இருந்து கட்சியைக் கட்டும் வேளையிலும் தமது சக்திக்கு தகுந்தவாறு தேசிய விடுதலைப் போராட்டத்திலும் பங்கு வகித்து வரும் குழுக்கள். இரண்டு, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் சிறு முதலாளிய சுத்த ராணுவக் கண்ணோட்டம் கொண்டதவும், சந்தர்ப்பவாத மார்க்சியத்தை கடைப்-பிடித்த இயக்கங்களில் இருந்தும் போராட்ட நடைமுறைகளினூடாக பாட்டாளி வர்க்கச் சித்தாந்தத்தை கிரகித்துக்கொண்டு அராஜகம் மிக்க தமது பிற்போக்குத் தலைமைகளுக்கு எதிரான உட்போராட்டத்தின் மூலம் அத்தலைமைகளை தூக்கியெறிந்து-விட்டு, தனித்துவம் உள்ள மார்க்சிய - லெனினிய கட்சியின் அவசியத்தை உணர்ந்து மார்க்சீய - லெனினிய வழியில் நின்று இயங்கும் குழுக்கள்.

இவ்விதமாக இயங்கும் மார்க்சீய - லெனினிய குழுக்கள் எல்லாம் புரட்சி-கர குழுக்களிடையேயான ஐக்கியத்தை வலியுறுத்துகிறார்கள். திட்டமிட்ட முறையில் ஐக்கியத்துக்கான வேலைகளை செய்வதில் சில குழுக்கள் தமது சிந்தனைகளை முன்-வைக்கத் தொடங்கியுள்ளன. இவை வரவேற்கப்படவேண்டிய அம்சமாகும். இலங்கையின் புதிய ஜனநாயகப் புரட்சி, தமிழீழ தேசிய விடுதலைப் புரட்சி,

...2/-

www.tamilarangam.net



இவற்றுக்கிடையேயான தொடர்பும் சமூக அமைப்பு பற்றிய வரையறுப்பும், யுத்த தந்திரம், போர்த் தந்திரம், சர்வ தேசிய நிலைப்பாடு, கட்சியைக் கட்டுவது, படையைக் கட்டுவது... இன்ன பிற அடிப்படைக் கொள்கைகளில், சில குழுக்களிடையே மிக நெருங்கி வரக்கூடிய முரண்பாடுகளேயுள்ளன.

ஆனல் இங்கு இவை எல்லாவற்றுக்கும் மேலாக அனைத்து குழுக்களாலும் பார்க்கப்படும் விடயம் என்னவெனில், ஒவ்வொரு குழுவும் நடைமுறையில் என்ன செய்து கொண்டிருக்கின்றது. மாறிவரும் அரசியல் சூழ்நிலைமைகள் பற்றிய நிலைப்பாடுகள் என்ன? அந்தந்த குழுக்களில் உள்ள முன்னோடிகளின் அரசியல் வரலாற்று பின்னணிகள், நடைமுறைகள் எத்தன்மையது? ஒவ்வொரு குழுக்களுக்கும் உள்ள உள்நாட்டு, வெளிநாட்டு தொடர்புகள் எத்தகையது? தத்தமது அமைப்பு வேலைகளுக்கான நிதி (அதாவது வெளியீடுகளில் இருந்து ஆயுத கொள்வனவு வரை) எந்த சமூக சக்திகளின் தொடர்பு மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது? இப்பிரச்சினைகளை மிகவும் கவனத்துக்கு உரியதாக பார்க்கப்படுகின்றது. இவைகள் கவனத்தில் கொள்ள வேண்டிய மிக மிக அவசியமானவைதான். ஆனல் இவற்றை மட்டுமே பார்த்துக்கொண்டு இருப்பதுதான் தவறாகும். ஏனெனில், மேற்கூறிய நடைமுறை பிரச்சினைகளின் சாதகமான முடிவுகள் ஏற்பட்டாலும் போராட்டம் பற்றிய அடிப்படை கொள்கைகளே ஐக்கியத்தை தீர்மானிக்கும் சக்தி பெற்றவை என்பதுதான்.

புரட்சிகரப் போராட்டம் பற்றிய அடிப்படை கொள்கைகளில் திரிபுவாதமையக் கருத்துக்களும், அனுபவவாதம் போக்குகளும் காணப்படுகின்றது. புரட்சிக்கு எதிரான கருத்து போக்கு மையங்களையும், அக்கருத்துக்கு உரிய நபர்களையும் ஆபத்தான சக்திகளென உரைப்படுகின்றது. உரிய அரங்குகளில் தகுந்த முறையில் அவர்களது போலி அரசியல் முகங்களை கருத்து ரீதியான போராட்டங்கள் ஊடாக அம்பலப்படுத்தப்படல் வேண்டும். ஆனல் இந்த அணுகுமுறை பின்பற்றப்படாது, வெறும் "அகம்ன அளவிலான நிராகரிப்புபாணி" தொடர்வது வேதனைக்குரிய அணுகுமுறையாகவுள்ளது.

இக்குழுக்கள் மத்தியில் இருக்கும் சில நபர்கள் அமைப்பு வேலைகளுக்கான நிதியைத் திரட்டுவதில் மிகவும் அப்பட்டமான பிற்போக்கு வழிமுறைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்பற்றுகின்றனர். சுலபமான வழிகளிலும் குறுக்கு வழிகளிலும் நிதியைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அமைப்பைக் கட்டமுடியும் என நினைக்கின்றனர். ஏனைய எல்லாவிதமான கொள்கைகளிலும் புரட்சிகரமாக இருப்பதாக நினைத்து நிதி திரட்டுவது பற்றிய கொள்கையில் சிறு முதலாளிய இயக்க வழிமுறைகளை கடைப்பிடிக்கின்றனர். போதை வஸ்துக் கடத்தல்காரர்களிடம் இருந்தும், தன்னார்வக் குழுக்களிடம் இருந்தும் நிதியைப் பெற்றுக்கொள்கின்றனர். உண்மையில் இவர்கள் அமைப்பை முன்னோக்கி நகர்த்துகிறார்களோ இல்லையோ தமது சொந்த வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல இந்த குறுக்கு வழியை பின்பற்றுகிறார்கள், என்பது தெளிவு. புரட்சிகர இயக்கத்தை உள்ளுக்குள்ளேயே இருந்து தாக்கி அழிக்கக்கூடிய இந்த கிருமிகள் பாட்டாளி வர்க்கத்துக்கு போராடுவதாகக் கூறிக்கொண்டு புரட்சிக்கு எதிராக வேலை செய்கின்ற எல்லா நச்சுச் சக்திகளுடனும் தொடர்புகளை வைத்துக்கொண்டுள்ளனர். நிலப்பிரபுக்களிடம் இருந்தும், பெரிய பெரிய முதலாளிகளுக்காகவே இருக்கும் அரசிடம் இருந்தும் பறிமுதல் செய்யப்படும் பணநடவடிக்கைகளைப் பார்த்து புரட்சிக்கு ஆபத்து! ஆபத்து! என ஓலமிடுகின்றனர்.

இது போன்ற இரண்டு முகங்கொண்ட நபர்களையும், மார்க்கங்களையும், உள்ளுக்குள்ளேயே கொண்டிருக்கும் குழுக்கள், தம்மத்தியிலுள்ள அத்தகைய நபர்களை அம்பலப்படுத்தவேண்டும். தூக்கியெறிய வேண்டும். மார்க்கங்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை முன்வைக்க வேண்டும்.

குழுக்களுக்கிடையிலான ஐக்கியத்தை நோக்கிய பாதையில் இது போன்ற விடயங்களை வெளிப்படையாக முன்நிறுத்துவதுடன் ஆரோக்கியமற்ற அளவிலான நிராகரிப்பு பாணியை கைவிட்டு ஆரோக்கியமான அணுகுமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். தெளிவுடனும் உறுதியுடனும் செய்யப்படும் இவ்வகை செயற்பாடுகள் மூலம் ஒவ்வொரு குழுவும் தனது அரசியல் பாதையையும், நடைமுறைகளையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். குழுக்களுக்கிடையில் நிலவும் தேவையான சந்தேகங்களையும், தேவையற்ற தப்பெண்ணங்களையும் நீக்கிக்கொள்ள முடியும். ஒன்று பட்ட மார்க்சிய - லெனினிய கட்சியைக் கட்டும் பணியில் தத்தமது திட்டங்களை கொண்டு கொள்கை அடிப்படையிலான வாத விவாதங்களினூடாக பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட பலத்தை சாதிப்பதன் சமூகத் தேவையை உணர்ந்து கடையாற்ற முடியும்.

...4/-

www.tamilarangam.net



புரட்சிகரத் தத்துவம் இல்லையேல் புரட்சிகரக்கட்சி இல்லை. புரட்சிகரக்கட்சி இல்லையேல் புரட்சி இல்லை என்பதனால் புரட்சிகர போராட்டத்தினை முன்னெடுத்து செல்லும் நாம் அதன் உயிரோட்டமான புரட்சிகரத் தத்துவத்தை நிறுவிக்கொள்ளவும், காப்பாற்றவும் தொடர்ச்சியான சித்தாந்த யுத்தம் நடத்தியாக வேண்டும்.

"ஆசிரியர் குழு".

* * * * *

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

"இலங்கையின் இன ஒடுக்கலுக்கு எதிரான தமிழ் மக்களது போராட்டம் நியாயமானது மட்டுமல்ல தவிர்க்க முடியாததும் அவசியமானதுமாகும். இன்றைய சூழலில் அதன்தீர்வு, அடக்குமுறையாளர்களான சிங்கள பேயினவாதப் பிற்போக்கு சக்திகளின் போக்காலும், அதற்கெதிரான போராட்டத்தின் வளர்ச்சியாலும் நிர்ணயிக்கப்படும். சமகால இலங்கையின் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்த இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்பு உதவாது என்பது தெளிவு. சுதந்திர ஈழம் என்பது சாத்தியமான தீர்வுகளில் ஒன்றேயன்றி, நம்முன் உள்ள ஒரே தீர்வோ அதிசிறந்த தீர்வோ அல்ல. இலங்கையின் சிறுபான்மை இனங்களுக்கு சுயநிர்ணயத்தையும் அதேசமயம் இலங்கையின் உள்விவகாரங்களில் அயல்நாடுகள் சிறுபான்மை இனங்களின் பிரச்சனையையோ வேறு எக்காரணத்தையுமோ பயன்படுத்தி குறுக்கிடாதவாறு உத்தரவாதத்தையும் வழங்கவல்ல ஒரு நியாயமான தீர்வு சாத்தியம். அடக்கு-முறை மூலம் தமிழ் மக்களையோ மற்ற சிறுபான்மையினரை அடக்கியாள முடியாது என்ற உண்மை சகலருக்கும் பிரட்தியட்சமாகி வருகின்றது. சுமூகமான தீர்வுக்கான நேர்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் சூழ்நிலைமையில் அன்றைய அரசியல் நிலைமைகளை அடிப்படையாக கொண்டே தீர்வின் விபரங்கள் தீர்மானமாகும். எவ்வாறாயினும் நிலைக்கக்கூடியதும் நியாயமானதுமான ஒரு தீர்வு முழு இலங்கையிலும் ஒரு அடிப்படை அரசியல் மாற்றத்தின் மூலமே சாத்தியம் என்பது பற்றி நமக்குள் சந்தேகமில்லை".

-இலங்கை இன ஒடுக்கலும் விடுதலை போராட்டமும் என்ற வெளியீட்டிலிருந்து -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியலும் இராணுவமும்

அரசியலுக்கும் இராணுவத்திற்கும் இடையிலுள்ள உறவிலும் இராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையிலுள்ள உறவிலும் எல்லா போராளி இயக்கங்களும் இழைத்த தவறு-களின் விளைவாகவும் ஆயுதபாணியான தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஏற்பட்டுள்ள வீழ்ச்சியையும் இது இலங்கையின் சமூக அமைப்பில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களை-யும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். இந்த விலைமதிப்பில்லா அனுபவங்களை பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள் தொகுத்து கொள்வதும் தமது இராணுவத்தை கட்டுவதில் சரியான இராணுவ விஞ்ஞானத்தை பின்பற்றுவதும் அவசியமானதாகும்.

ஆயுதபாணியான தேசிய விடுதலை இயக்கங்களின் வீழ்ச்சியைக் கணிப்பதில் ஆயுதமேந்திய குழுக்களின் தலைவர்கள் பலருக்கு இருக்கும் அரசியல் வறுமையும் தவறான அரசியல் இராணுவ கண்ணோட்டமும், முழுமையாக நலன்களுக்கு வழி-வகுக்க அவர்களது வர்க்க நலன் இடங்கொடாமையுமே இதன் பிரதான காரணங்கள் என்றும் இன்றைய நெருக்கடிகளில் இதுவே பிரதானமானது எனவும் சிலர் கருதுகிறார்-கள், முன்வைக்கிறார்கள். இது சுயவிமர்சனம், விமர்சனம் ஆகிய ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கமுடியாத கண்ணோட்டத்தின் விளைவல்ல. இது சம்பந்தமான எமது கண்ணோட்டம் மாறுபாடானது. இராணுவ விஞ்ஞானத்தை "மக்கள் யுத்தம்", அரசியல் ஆணையின் கீழான இராணுவம், மக்கள் படை, இவ்வித அபிலாசைகளைக் கொண்டிருந்த நாம் இராணுவ விஞ்ஞானத்தில் மிகப்பலவீனமாக இருந்ததுவே இங்கு பிரதான எதிரிடைக் காரணியாகும். இராணுவ செயல்பாட்டின் அவசியத்திற்கு பொருத்தமான நடைமுறையை நிறைவேற்றுவதற்கு அவசியமான சித்தாந்தத் தெளி-வற்றவர்களாகவே இருந்து வந்துள்ளோம். தற்போதுகூட இக்குறைபாட்டை நாம் நடைமுறை அவசியத்திற்கு ஒத்த முறையில் வளர்த்தெடுக்கவில்லை. போராளிகள் மத்தியில் உள்ள பெரும்பான்மையான சுத்த இராணுவ தளபதிகள் ஆயுத துறையிலுள்ள சில தொழில் நுட்பத்தையும் தலித்து ஒரு அலகாக எடுக்கப்பட்ட யுத்த முனையில் கையாளப்பட வேண்டிய சில போர் யுக்திகளையும் மாத்திரம் தான் புரிந்து வைத்திருக்கின்றார்களே தவிர அதற்கப்பால் எதுவுமே தெரியாது. அதற்கப்பால் ஏதாவது இருக்கிறது என்பதுகூட தெரியாது.

இராணுவத்திற்கு அரசியல் வேண்டும் என்று கூறும் நாமோ இதற்கப்பாலும் ஏதோ உண்டென்பதை ஓரளவிற்கு புரிந்து கொண்டுள்ளோம். இக்கல்வியை நாம்

www.tamilarangam.net



பொறுப்புணர்ச்சியுடன் மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பான ஒரு சராசரி-யான முடிவுக்கு நாம் விரைவில் வரவேண்டும். இது சம்பந்தமான அனுபவங்களை பெற்றுள்ள ஏனைய இயக்கங்களுடன் நாம் அனுபவ பரிமாற்றங்கள் செய்துகொள்ள வேண்டும்.

இராணுவத்தை அரசியல் மயப்படுத்தாவிடில் ஏற்படும் விளைவுகள்:-

இராணுவத்தை அரசியல் மயப்படுத்தாவிடில் (1) எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்பதை இனங்காண முடியாது போய்விடும். (2) வெகு-சனங்களை அணிதிரட்டல் என்பதுவும், அவர்களை போராட்டத்தின் பங்காளர்களாக மாற்றுதல் என்பதுவும், வெறும் கற்பனையாய் மாறிவிடும். (3) இயக்கங்களுள் ஒருமைப்பாடும் ஐக்கிய முன்னணியும் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்றாகி-விடும். (4) புதியதொரு சமுதாயத்தின் சிற்பிகளாக தமது அமைப்புக்களை மக்கள் கருதி அதற்காக தம்மை தயார்படுத்திக் கொள்வதற்கு பதிலாக, தற்-போதைய சமுதாயத்தை பாதுகாக்கும் நிலைக்கே மக்கள் தள்ளப்படுவார்கள். (5) அரசியல் மயப்படாத அவ் இராணுவம் கூட சமுதாயத்தின் பாதுகாவலாக இருப்பதற்கு பதிலாக சமுதாயத்திற்கு பாரமானதொன்றாக மாறிவிடும். இவைகள் மிகச் சரியான கணிப்பீடுகளாகும். எம்மில் பலர் இதை இன்னமும் புரிந்து கொள்-ளாமல் பழைய பாணியிலேயே இராணுவத்தை தொடர்ந்தும் வைத்திருக்க விரும்பு-வதை அல்லது கட்ட விரும்புவதை முட்டாள் தனமென்று கூறுவதா? விடுதலைப் போருக்கு செய்யும் திட்டமிட்ட துரோகம் என்று கூறுவதா? இந்த இரண்டில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.

ஆயுதப் போராட்ட நிகழ்ச்சி நிரலாக இருக்கும் தமிழீழத்தில் ஒரு இயக்கத்தின் வெற்றி தோல்வியையும் அதன் குணாம்சத்தையும் தீர்மானிப்பது அவ்-வியக்கத்தின் ஆயுதப்படையின் அரசியல் குணாம்சங்களேயாகும். இது மிகவும் அவதானத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய உண்மையாகும். கடந்த கால வரலாறு எமக்கு எடுத்து தரும் விலைமதிப்பில்லா அனுபவமாகும். எம்மில் பலர் இன்னமும் இதை புரிந்து கொள்ளவில்லை. புரட்சிகர அரசியல் பற்றியும், மார்க்சிசம் - லெனினிசம் பற்றியும் பேசுபவர்கள் வரலாற்றின் உடனடித்

www.tamilarangam.net



தேவையான புரட்சிகர இராணுவத்தை மறந்துவிட்டார்கள். இராணுவத்தை அரசியல் மயப்படுத்தாவிடில் அது தனது அரசியல் கடமைகள் எதையுமே செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகி சமுதாயத்திற்கு பாரமானதொன்றாக மாறிவிடும் என்பது உண்மையே. ஆனால் இதன் விளைவு இத்துடன் நின்று விடுமென்பதில்லை. இதற்கு அப்பாலும் செல்லும். இராணுவம் என்பது நிறுவனமயப்படுத்தப்பட்ட பலாத்காரமாகும். இது தனது அங்கத்தவர்களிடத்து ஒரு மனோ தத்துவத்தையும் உருவாக்கிவிடுகிறது. இவ் நிறுவனமயப்படுத்தப்பட்ட பலாத்காரத்தின் ஊடாக புரட்சிகர அரசியலற்ற இராணுவத்தினுள் இராணுவ அதிகாரிகள் கூட்டமொன்று உருவாகின்றது. இக்கூட்டம் சுரண்டும் வர்க்கத்தின் ஒரு பகுதியினராக அதிகாரத்துவ முதலாளி வர்க்கத்தின் குணாம்சத்தை படிப்படியாக பெற ஆரம்பிக்கிறார்கள். இது ஒரு தனிவர்க்கமாகிறது. இதன் விளைவு போராட்டத்தின் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் சமுதாயத்தின் அதிகாரத்தை இந்த வர்க்கம் தமிழீழ உயர்-வர்க்கங்களுடன் சேர்ந்து பங்கிட்டுக் கொள்கிறது. ஆக போராட்டத்தின் இறுதி விளைவு என்ன? தமிழீழ சமுதாயம் எவ்வித புரட்சிகர மாற்றத்திற்கும் உள்ளாக-வில்லை. மாறாக நிலவும் சமூக அமைப்பு மேலும் பலமடைகிறது. சோசலி-சுத்தின் பெயரால் முதலாளித்துவம் தன்னை சக்திப்படுத்திக் கொள்கிறது. சிறிலங்கா பேரினவாத அரசிற்கும் தமிழ் ஈழத்திற்கும் இடையேயான உறவில் எந்தவித அடைப்படை மாற்றமும் ஏற்படவில்லை. சில சமரசங்கள் செய்து கொள்ளக்கூடிய சக்தியை பெற்றதுதான் மீதமாகும். சுரண்டும் வர்க்கங்களின் ஆதிக்கம் நிலவும் ஒரு சமூக அமைப்பில் தோற்றுவிக்கப்படும் ஒரு இராணுவ கூட்டமைப்பானது புரட்சிகர அரசியலை நோக்கி தன்னை வளர்த்துக்கொள்ள தவறுமானால் அது ஒன்றில் சமுதாயத்திற்கு பாரமான பல அடுக்கு துண்டுகளாகவும் சிதறல்களாகவும் மாறும். இல்லையேல் அது எதிர் புரட்சி இராணுவமாக சுரண்டும் வர்க்கங்களின் பாது-காவலனாக மாற்றமடையும்.

இராணுவத்தை அரசியல் மயப்படுத்துவது தொடர்பாக:-

இதை ரு வகைகளில் பிரித்துப் பார்க்கலாம். (அ) இராணுவத்தை ஒரு புரட்சிகர அரசியல் கட்சியின் தலைமையின் கீழ் கொண்டுவருதல், (ஆ) இராணுவத்துள் புரட்சிகர அரசியலை வெற்றி பெறச்செய்தல். இவை இரண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பிரச்சனைகளேயாகும். ஆனாலும் தனித்தனி தன்மை கொண்டவைகளாகும். இதில் இராணுவத்தை ஒரு புரட்சிகர அரசியல் கட்சியின் தலைமையின்கீழ் கட்டுவதே பிரதானமானது. இது சாத்தியமாகும்போது மாத்திரமே, இராணுவத்தால் புரட்சிகர அரசியலை வெற்றி பெறச் செய்யமுடியும். ஆகவே, இராணுவத்தை ஒரு புரட்சிகர அரசியலின் கீழ் கட்டுவது என்ற பிரச்சனையை முதலில் எடுத்துக் கொள்வோம்.

இராணுவத்தை புரட்சிகர அரசியல் கட்சியின் கீழ் கட்டுவது:-

புரட்சிகர கட்சி ஒன்று இருப்பதாக முன்கூட்டியே அனுமானித்துக்கொண்டு அக்கட்சி எவ்விதம் தனது தலைமையில் ஒரு புரட்சிகர இராணுவத்தை அமைப்பது என்ற தோரணையிலேயே சிலரால் இப்பிரச்சனை எழுப்பப்படுகின்றது. எமது யதார்த்த நிலைமையோ முற்றிலும் வேறுபட்டது. இங்கு எம்மிடம் புரட்சிகர கட்சி என்று எதுவுமே இல்லை, 1930-களிலிருந்து 1950-கள் வரையான உழைக்கும் மக்களின் போராட்டங்களினூடாக கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று உருவாகி வந்தது. ஆனால் இக்கட்சி 1950-களின் பிற்பாடு இலங்கை முதலாளித்துவத்தின் தொங்கு தசையாக தன்னை மாற்றிக்கொண்டது. இதன் காரணத்தால் திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சி இலங்கை வரலாற்றில் இருந்து படிப்படியாக தூக்கியெறியப்பட்டது. புரட்சிகரமான கட்சிகள் எதுவுமே இல்லை என்ற நிலை 1970-ன் ஆரம்பத்திலேயே உருவாகிவிட்டது. இந்த நிலையில்தான் இலங்கையின் வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் பாரம்பரிய பிரதேசமாக தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் பலாத்கார வடிவத்துடன் வளர ஆரம்பித்தது. சிறு முதலாளித்துவ வர்க்கத்தன்மை கொண்டவர்களே இப்பலாத்கார வடிவமுள்ள போராட்டத்தின் பிரதான செயல்படு சக்திகளாக இருந்தார்கள். இவர்கள் ஆரம்பத்தில் முதலாளித்துவ அரசியல் தலைமையை ஏற்றுக்கொண்டிருந்தாலும் பின் அதை படிப்படியாக நிராகரித்தார்கள். பலாத்காரவடிவமுள்ள போராட்டம் சிறு முதலாளித்துவ அணியினரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டது.

குறிப்பாக சொல்லப் போனால் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட பலாத்கார கருவியான இராணுவ அமைப்புக்களை ஆரம்பத்தில் உருவாக்கியது சிறுமுதலாளித்துவ வர்க்கமேயாகும். அரசியலையே நிராகரித்த சுத்த இராணுவ கண்ணோட்டம்

www.tamilarangam.net



பெற்ற அரசியல் அணி, புரட்சிகரமான அரசியல் கருத்துக்களின்மேல் நாட்டங்கொண்ட ஒரு அரசியல் அணி. ஆயுதப் போராட்டமே போராட்டத்தின் பிரதான வடிவமாகவும் தீர்க்கமான வடிவமாகவும் இருந்ததனால் அனைவரின் கவனமும் இதை நோக்கியதாகவே இருந்தது. இராணுவத்தை கட்டுவதிலும் போராட்ட மார்க்கத்தையும் யுக்திகளையும் வகுத்துக் கொள்வதில் ஒவ்வொரு அணியும் தத்தமது கருத்துக்கொப்ப செயல்பட்டார்கள்.

இந்நிலையில் ஒரு புரட்சிகர கட்சி எவ்விதம் இந்த இராணுவத்திற்கு தலைமை கொடுக்க முடியும். அதற்குத் தகுதியான கட்சிதான் ஒன்றில்லையே. கட்சி, கட்சியின் தலைமையிலான இராணுவம் இவ்விதமான இலட்சியங்களை வாய்ப்பாடுகளாக உச்சரிப்பதால் என்ன பயன்? கட்சி ஒன்றை உருவாக்குவது எப்படி? இக்கட்சியின் தலைமையின் கீழ் இராணுவத்தை உருவாக்குவதா? அல்லது இருக்கும் இராணுவத்தை கட்சியின் தலைமையின் கீழ் கொண்டு வருவதா? இவைகளே நாம் முதலில் தொடுக்கும் குறிப்பான தத்துவார்த்த பிரச்சனைகளாகும். தேசிய விடுதலைப் போராட்டமே முனைப்பு பெற்றிருக்கக்கூடிய பல நாடுகளில் இப்போராட்டத்தை தலைமை தாங்கி செல்லுவதற்கான தலைமை பெற்ற கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று தற்போது முனைப்பு பெற்று போராட்டங்களிற்கு முன்பான போராட்டங்கள் மூலம் தோற்றுவிக்கப்பட்டிராத நாடுகளில் தொழிலாளிகளும் விவசாயிகளும் இன்னும் போராட்ட மேடையில் பிரசன்னமாகாத நிலையில் சிறுமுதலாளித்துவ வர்க்கமே பிரதான போராட்ட சக்தியாக அணியாக செயல்பட்டு வரும் நாடுகளில் இரு ஒரு தத்துவார்த்தப் பிரச்சனையாக உள்ளது. லத்தீன் அமெரிக்காவின் பல நாடுகளும, சில ஆப்பிரிக்க நாடுகளும் இலங்கையும் இதற்கான உதாரண நாடுகள் ஆகும். இத்தத்துவார்த்தப் பிரச்சனையை ஒட்டிய விவாதத்தின் விளைவுதான் "டெப்றே" "கப்ரேல்", "சேகுவரா" போன்றோரின் தோற்றமாகும். இவர்கள் இராணுவ தலைவர்கள் மாத்திரமல்ல கட்சி அமைப்பு சம்பந்தமாக பல்வேறு தத்துவங்களின் தலைவர்களாகும்.

தமிழீழம் உட்பட இவ்விதமான நாடுகளில் சிறுமுதலாளித்துவ போக்கை பிரதான செயல்படு அணியாக கொண்டுள்ள ஆயுதப்போராட்டத்தினூடாகவே ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க முடியும். போராட்டக் களத்தில் ஒதுங்கி நின்று ஒரு கட்சியை கட்டமுடியாது. சிலர் தமிழீழ விடுதலைப் போராட்ட தளத்தில் நின்று ஒதுங்கியிருந்து அதனுடன் நேரடித் தொடர்பு எதுவும் அற்ற வெகுஜன

www.tamilarangam.net



அமைப்புக்களை உருவாக்குவதன் மூலம் கட்சியை கட்ட முயற்சிக்கிறார்கள். வேறுசிலர் மார்சிய-லெனினிய படிப்பாளிகளையும் விமர்சகர்களையும் ஒன்று சேர்த்து கட்சியைக் கட்ட முயல்கிறார்கள். இவை இரண்டும் படையில்லா தளபதிகளின் கட்சியாகத்தான் இருக்க முடியும்.

அவ்விதமானல் ஒரு கட்சியைக் கட்டுவது எப்படி? இராணுவத்தை ஒரு புரட்சிகர கட்சியின் தலைமையின் கீழ் உருவாக்குவது எப்படி? தமிழீழ விடுதலைப் போராட்டத்தினூடாகவே இவ்விதமானதொரு கட்சி தோற்றுவிக்கப்பட வேண்டும். தோற்றுவிக்கவும்படும். ஆனல் இது இலகுவான காரியமல்ல. அரசியல் சிக்கல் நிறைந்ததொரு விஷயமாகும். சிறுமுதலாளித்துவ வர்க்க எண்ணம் கொண்டோரே பிரதான செயல்படு அணியாக இருக்கும்போது உழைக்கும் மக்களின் உணர்வு பூர்வமான பங்களிப்பை இன்னும் தமிழீழ வரலாறு பெற்றுக்கொள்ளாத போது பல்வேறு வர்க்கங்களைக் கொண்ட பரந்த ஐக்கிய முன்னணி ஒன்றின் அவசியம் யதார்த்தமாய் இருக்கும்போது இப்பிரச்சனை மிகவும் அரசியல் சிக்கலானதாயே இருக்கும். இதன் காரணத்தால் போராட்டத்தை விட்டும் ஆயுதப் போராட்ட களத்தைவிட்டும் ஒதுங்க மனமின்றியுள்ள போர்குணமிக்க, அரசியல் கருத்தோட்டமுள்ள தோழர்கள் இராணுவத்திற்கு கட்சி ஒன்றின் தலைமை அவசியமில்லை. இராணுவமே தன்மட்டில் ஒரு கட்சிதான் என்ற வாதத்தை முன் வைக்கிறார்கள். இக்கருத்தோட்டமே இன்று தேசிய விடுதலை இயக்கங்களுள் ஆதிக்கம் பெறும் கருத்தோட்டமாக உள்ளது. இக்கருத்தோட்டத்தின் சர்வதேசிய தலைவன் தான் "டெப்ரோ"வாகும். இக்கருத்தோட்டம் உள்ளவர்கள் தமது கருத்தும் ஒரு சித்தாந்த வகைப்பட்டது என்பதையோ இதற்கு ஒரு சித்தாந்த தலைவன் உள்ளான் என்பதையோ இன்னும் அறியாதுள்ளார்கள்.

இங்கு "சோசலிச தத்துவமும் கொரில்லா யுத்தமும்" என்ற தலைப்பில் "பிரச்சார வெளியீட்டு வாரியம்" தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியிடப்பட்ட புத்தகத்தில் ரெஜி டெப்ரோவின் கட்டுரையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வோம்.

"இன்றைய சூழ்நிலையில் நாம் பலப்படுத்த வேண்டியது எதனை? ஒரு கட்சியையா அல்லது மக்கள் இராணுவத்தின் மைக்கருவான கொரில்லா அணியையா? இவற்றிற்கு இடையிலான முக்கிய தொடர்புதான் என்ன? எந்த அமைப்பைக்

www.tamilarangam.net



கட்டி எழுப்புவதில் நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்?"

"மார்க்சிய சித்தாந்த மரபிலும், மார்க்சிய வரலாற்றிலும் இந்த கேள்விகளுக்கு வழக்கமான பதிலே அளிக்கப்படுகிறது".

"இவர்களது பதில் இதுதான் அதாவது ஒரு கட்சியைத்தான் முதலில் கட்டியெழுப்பவேண்டும். கட்சியைத்தான் பலப்படுத்த வேண்டும். ஏனென்றால் கட்சிதான் மக்கள் இராணுவத்தை உருவாக்கி வழி நடத்தும் ஆற்றல் பெற்றது. விஞ்ஞான ரீதியான அரசியல் பாதையை நெறிப்படுத்தும் ஒரு தொழிலாளர் வர்க்க கட்சிதான் ஒரு உண்மையான மக்கள் இராணுவத்தைக் கட்டியெழுப்பி தொழிலாளரின் நலனுக்காக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றவல்லது".

நாம் இன்று இங்கு முகம் கொடுக்கும் தர்க்கங்கள் லத்தீன் அமெரிக்காவில் என்றோ ஆரம்பித்துவிட்டன. லத்தீன் அமெரிக்காவில் கட்சியில்லாப் புரட்சி பற்றிக் கூறிவருகிறார்கள் (தனது ஆன்மாவை இழந்துவிட்ட புரட்சியாக நீங்கள் கருதினால் அது என்றும் தப்பில்லை.)

"கியூபாவை எடுத்துக்கொண்டால் இராணுவ - அரசியல் தலைமைப்பீடமானது ஒரு தனிமனிதரிடமே, பிடல் காஸ்ரோவிடமே ஒன்றியமாகி உள்ளது. இது எவ்வித அர்த்தமும் இன்றை தற்செயலாக நிகழ்ந்ததா? அன்றி மாறுபட்ட ஒரு சரித்திர நிகழ்வைக் குறிக்கின்றதா? அல்லது இதனை ஒரு விதிவிலக்கான சம்பவம் எனக் கொள்வதா? அன்றி இந்நிகழ்வு அடிப்படையானதொன்றை முன்குறித்துக் காட்டுகிறதா? இன்றைய லத்தீன் அமெரிக்க புரட்சி அனுபவத்தைப் பொறுத்தவரை இது புகட்டும் பாடம் தான் என்ன?"

"கட்சி இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு புரட்சி ஏற்பட முடியும் என்று நாம் இன்றைய சூழ்நிலையில் சிந்திப்பதற்கு காரணமென்ன....?"

"மக்களை வழிநடத்தி செல்லும் ஒரு கட்சி உருவாவது எப்படி? இன்றைய லத்தீன் அமெரிக்க சூழ்நிலையில் கட்சியானது ஒரு மக்கள் இராணுவத்தை உருவாக்க முடியுமா? அல்லது மக்கள் இராணுவம்தான் ஒரு முன்னணித் தலைமையை உருவாக்குமா"?

"தமது கட்டுப்பாட்டுக்கும் மிஞ்சிய சூழ்நிலையின் காரணமாக லத்தீன் அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சிகள் முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே பிழையான

www.tamilarangam.net



முறையில் தோற்றம் கொண்டதால் இன்று மிகச் சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. கட்சிகள் என்பது வர்க்கப் போராட்டத்தின் கருவிகளே அன்றி வேறொன்றுமல்ல. இந்தக் கருவிகள் தமது கைங்கரியத்தை செய்யமுடியாது போனால் வர்க்கப் போராட்டம் என்பது ஒரு முடிவுக்கு வந்துவிடும் என எண்ணுவதா? அல்லது புதிய கருவியை நாம் உருவாக்க வேண்டுமா?" இங்கு எமது நிலை அப்படியே பொருந்துகிறது. ஆகையினால் தான் ஈழ விடுதலைப் போராளிகளில் பலர் டெப்ரோவை ஏற்றுக்கொண்டார்கள் போலும்.

"கட்சி வர்க்கப் போராட்டத்தின் ஒரு கருவியேயன்றி வேறொன்றுமில்லை" என்று டெப்ரோ கூறுகின்றார். தொழிற்சங்கம் ஒரு கருவி, பிரச்சார இயந்திரம் ஒரு கருவி, இராணுவம் ஒரு கருவி. இவற்றைப் போல்தான் கட்சியும் ஒரு கருவி இக்கருவிகள் சகலதையும் ஒன்றிணைத்து ஒரே தலைமையின்கீழ் ஒரு பொதுவான திசைவழியை நோக்கி கொண்டு நடத்துவது எது? அல்லது யார்?"

சகல கருவிகளினதும் தலைமை - ஒரு தலைவன்தானா? அவன் இராணுவ பிரதான தளபதியா? அரசியல் எதுவுமே தெரியாத அவன்தான் அரசியல் கருவியையும் இயக்குகிறான்? போராளி அமைப்புகள் இவ்விதமானதொரு தன்மையையே கொண்டிருந்ததை யாரும் அறிவீர்கள். தொடர்ந்தும் இதேபாணியை பின்பற்றவே இன்னும் சிலர் முயற்சிக்கிறார்கள். அரசியல் அங்கம் என்பது இராணுவ தளபதியின் கைங்கருவியாகவே அரங்கின் கைப் பூமாலையாகவே இருந்தது.

கட்சி என்றால் என்ன என்பதற்கு தவறான ஒரு விளக்கத்தை கொடுத்துவிட்டு அதன் அரசியல் சமூக முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்ய வைத்துவிட்டு கட்சியையே நிராகரிக்கிறார் திருவாளர் "டெப்ரோ" அவர்கள். தமது சிறுமுதலாளித்துவ குணாம்சத்தின் காரணத்தினால் டெப்ரோவின் பார்வையிலேயே கட்சியைப் பார்க்கும் எம்மவர்களில் பலரும் இதே கருத்தையே கொண்டுள்ளார்கள். அவர்களும் கட்சியை நடைமுறையில் நிராகரிக்கிறார்கள். அவர்களும் ஏற்கிற டெப்ரேக்கள் கிடைத்தவுடன் தத்துவார்த்த ரீதியாகவும் கட்சியை நிராகரிப்பார்கள்.

கட்சி என்பது வர்க்கப் போராட்டத்தின் ஒரு கருவியேதான் சந்தேகமில்லை. தேசிய விடுதலைப் போராட்டமும் வர்க்கப் போராட்டத்தின் ஒரு வெளிப்பாடேயாகையால் கட்சி என்பது தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு கருவியேதான்.

www.tamilarangam.net



அதுதான் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அதாவது விரிவாக சொல்வதானால் தேசிய ஜனநாயகப் புரட்சியானாலும் புதிய ஜனநாயகப் புரட்சியானாலும் அனைத்து வேலைகளுக்கும் அனைத்து வழிகளிலும் பொறுப்பான தலைமையங்கமாகும். இது-தான் அரசியல் தலைமை சித்தாந்த தலைமை, பொது வேலைத் திட்டத்தையும், வகுத்து அதை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டலை வழங்கும் தலைமையங்கமாகும். புரட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒத்த திசையில் வழி நடத்திச் செல்லும் ஒரே அங்கம் இது மாத்திரமே. இது தொழிலாளி வர்க்கத்தின் அரசியல், சித்தாந்தப் பிரதிநிதியும் அதன் தலைமையுமாகும்.

ஆனால் மக்கள் இராணுவம் என்பது வர்க்கங்கள் அழியும் வரை நடந்து கொண்டிருக்கும். வர்க்கப் போராட்டமானது யுத்தம் என்ற கட்டத்தில் பிர-வேசித்ததன் பின் தொழிலாளி வர்க்கத்தின் இராணுவ தேவை; அரசியல் தேவை-யின் ஒரு தொடர்ச்சியும் அதன் அங்கமுமான இராணுவ தேவையை, மாத்திரம் பூர்த்தி செய்வதற்கான ஒரு அங்கம் மாத்திரமேயாகும். ஆகவே கட்சி என்ற கருவியையும் இராணுவம் என்ற கருவியையும் எந்த இடத்திலும் சமன்படுத்தமுடியாது.

டெப்ரே கூறுவதுபோல் பழைய கட்சிகள் துருப்பிடித்துவிட்டன என்பதற்காக கட்சி என்ற கருவியே வேண்டாம் என்று கூறி அதற்குப் பதிலாக அதற்கு ஈடாக இராணுவம் என்ற கருவியை அமைக்க முற்படுவது ஒரு மோட்டார் வண்டியின் ஓட்டி செயலிழந்துவிட்டார் என்பதற்காக அவரின் இடத்தில் ஒரு சக்கரத்தையோ எரி பொருளையோ அல்லது வேறு ஏதாவது உதிரிப்பாகத்தையோ வைப்பது போல ஆகும். இவ்வுதிரிப் பாகங்கள் எல்லாம் அவசியம்தான்; ஆனால் இவை ஓட்டிக்கு பதிலாக மாட்டாது, அவனை ஈடுசெய்யமாட்டாது.

மீண்டும் டெப்ரேவைத் தொடர்வோம்:-

"இன்று லத்தீன் அமெரிக்காவில் இங்கும் அங்குமாக போராட்டங்களில் பின்வாங்கல்கள் ஏற்படுவதை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. "கொரில்லா" இயக்கங்கள் பல்வேறு அரசியல் காரணங்களுக்காக பாவிக்கப்பட்டு வருகின்றன.

முதலாளிய ஆட்சிக்கு ஓர் அழுத்தத்தையும் கொடுப்பதற்காகவும் ஒரு அரசியல் சதுரங்க காயாக ஆடுவதற்காகவும் மட்டுமே கொரில்லா அணியை சில அரசியத் தலைவர்கள் பாவிக்க உருவாக்கிக் கொள்கிறார்கள். முரண்பாடுகளைத்

www.tamilarangam.net



தீர்த்து இராணுவ ரீதியில் வளர்ச்சி காண்பதாயின் கொரில்லா இயக்கமானது தனது அமைப்பிலிருந்தே ஓர் அரசியல் தலைமை பீடத்தை உருவாக்கிக் கொள்ள-வேண்டும். கொரில்லா இயக்கமானது தனது அணியில் இருந்து ஒரு கட்சியை ஒருபோதும் உருவாக்குவதில்லை. அதற்கு மாறாக போராளிகள் மத்தியில் கட்சி ரீதியான, சித்தாந்த ரீதியான வேறுபாடுகளைக்களைந்தெறியவே இயக்கம் முயற்சிக்கும். ஆயுதப் போரும் அதன் உடனடி அரசியல் இலக்குகளுமே போராளி-களை ஐக்கியப்படுத்தும், அம்சமாக அமைகிறது. அரசியல் நோக்குகளாக ஏற்கனவே மாற்றம் கொண்டுள்ள உடனடியான இராணுவ நடவடிக்கைகளைச் சுற்றியே கொரில்லா இயக்கமானது ஒற்றுமையைக் கட்டி எழுப்ப முனையும். கொரில்லாப் படையில் இதாவது விடுதலை இராணுவத்தில் அங்கத்துவம் பெறுவதே விடுதலை வீரர்களின் முதலாவது முக்கிய அரசியற் தீர்மானமாகிறது. அந்தச் சிறிய இராணுவம் படிப்படியாக வளர்ச்சி கண்டு தனது ஆரம்ப சாதனைகளை நிலைநாட்டும்போது சாதாரண உறுப்பினர்களிடையே ஒருமைப்பாடு பிரிக்கிறது. இறுதியில் இந்த விடுதலைப் படையானது மக்கள் இராணுவமாக விரிவடையும்போது, அதிலிருந்து ஒரு கட்சி பிறக்கிறது. சித்தாந்த ரீதியில் மக்கள் இராணுவமானது இந்தக் கட்சியின் கருவியாகக் கொள்ளப்படினும் சாராம்சத்தில் கட்சிதான் இராணுவமாகும்". (பக்கம் 25).

"கொரில்லா" அணி மாத்திரம்தான் ஒடுக்கப்பட்ட தேசத்தின் அல்லது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் விடுதலைக்கான படை அமைப்பு என்பதே டெப்ரேயின் கருத்தாகும். இதை நாம் தற்போதைக்கு சரியென அனுமானித்துக் கொள்வோம். விடுதலையுத்தத்தில் கொரில்லா அணியின் பங்கு என்னும் தலைப்பின் கீழ் இது பற்றி விரிவாகப் பார்ப்போம்.

"கொரில்லா" அணிக்கு அரசியல் அவசியம் இல்லை என்ற டெப்ரேயின் கருத்தில் அதற்கு எந்தளவிற்கு அரசியல் அவசியம் என்பதுவும் அவ்வவசியத்தை அது எவ்விதம் பெற்றுக்கொள்ளப் போகிறது என்பதே இங்குள்ள பிரச்சனை. இவர் கொரில்லா வீரர்கள் "தமது சொந்த அரசியல் பீடத்தை உருவாக்கி கொள்-கிறார்கள்" என்றும் "தனது அமைப்பில் இருந்தே ஒரு அரசியல் தலைமை பீடத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும்" என்றும் கூறுகிறார்கள். இதற்காக என்ன செய்ய வேண்டும்.

www.tamilarangam.net



வெளியில் இருந்து பிரயோகிக்க, திணிக்கப்படும் போக்குகளை காலப்போக்கில் கொரில்லா அணி நிராகரிக்கவேண்டும்".. இங்கு இவர் மறைமுகமாகவே அனைத்து கட்சிகளையுமே தாக்குகிறார். "போராளிகள் மத்தியில் கட்சி ரீதியான சித்தாந்த ரீதியான வேறுபாடுகளை களைந்தெறியவே இயக்கம் முயற்சிக்கும்". இங்கு இவர் மிகவும் பக்குவமான முறையில் வார்த்தைகளை பிரயோகிக்கிறார். "வேறுபாடுகளை களைந்தெறிவது" பற்றி பேசுகிறார். இதன் அர்த்தம் என்ன? கொரில்லா அணிக்குள் இவ்வித வேறுபாடுகள் இருக்கக்கூடாது என்பதேயாகும். "இராணுவத்தினுள் அரசியல் குழப்பத்தை உண்டு பண்ணுதே" என்று முகுந்தன் பாணியில் பேசுகிறார். டெப்ரோவின் அடுத்த கூற்றுக்கள் இதை தெளிவாக விளக்குகின்றன. "ஆயுதப் போரும் அதனது உடனடி இலக்குகளுமே போராளிகளை ஐக்கியப்படுத்தும் அம்சமாக அமைகிறது". அரசியல் நோக்குகளாக ஏற்கனவே மாற்றங்கண்டுள்ள உடனடியான இராணுவ நடவடிக்கையைச் சுற்றியே கொரில்லா இயக்கமானது, ஒற்றுமையைத் தட்டி எழுப்ப முடியும்" அமைய வேண்டும். தட்டியெழுப்பவேண்டும் என்பதையே, தட்டியெழுப்ப முடியும் என்று நாசுக்காக சொல்கிறார். அதாவது இதற்கப்பால் கொரில்லா அணிக்குள் எவ்வித அரசியல் வாதவிவாதங்கள் தோன்றுமானால் அது அரசியல் குழப்பங்களாகவும் தத்துவார்த்த தளம்படிகளாகவுமே கருதப்படும். முகுந்தன் பாணியினரின் அருமையான குருநாதர் டெப்ரேயைத் தவிர வேறுயாருமே இல்லை. சரி, டெப்ரேயின் இவ்வேலைகளின் விளைவு என்ன? "ஒரு அரசியல் முன்னணிப்படையாக உருவாகாது போனால் கொரில்லா இயக்கமானது இராணுவ ரீதியில் வளர்ச்சி காண முடியாது" என்று கூறுவதன் மூலம் கொரில்லா அணி தன் மட்டில் தானே ஒரு அரசியல் முன்னணிப்படை என்று கூறுகிறது.

டெப்ரே தலையைச் சுற்றி எமக்கு கூற வருவதை சாதாரண வார்த்தையில் எளிமையாக முன் வைப்போம். "என்னைப் போன்ற கைவிட்டெண்ணக் கூடிய சில சிறு முதலாளித்துவ புத்திஜீவிகளும் தனிநபர் வீரர்களும் எமக்கென்று சில அரசியல் நோக்கங்களை தீர்மானித்துள்ளோம். அது எந்த வர்க்கத்தின் நலனையும் பிரதிபலிக்காததால் நாம் எந்தக் கட்சியின் கட்டுப்பாட்டின் கீழும் செயல்பட தயாராய் இல்லை. நாம் கட்சிகளில் இருந்து சுதந்திரமாகவே இருக்க விரும்புகிறோம். எமது கோஷ்டியின் நலனே சமூக வர்க்கங்களின் நலனைவிட மேலானவை.

www.tamilarangam.net



ஆகவே, நான் குறிப்பிட்ட வர்க்க நலனை பிரதிபலிக்கும் கட்சிகளின் கட்டுப்பட்டிற்கு எம்மை உள்ளாக்கிக் கொள்ளமாட்டோம். (தான் இவ்விதம் இருக்கும் போதுதான் அவசியம் ஏற்படும்போது ஏதாவது ஒரு முதலாளித்துவ கட்சியோடு, அவர்களால் இணைந்து கொள்ளமுடியும். என்பதை யாராவது புரிந்து கொள்வீர்களானால் மார்க்சிசத்தின் பேரால் கேட்டுக் கொள்கிறோம். தயவு செய்து உண்மையைப் பேசாதீர்கள். அது கோஷ்டிகளின் நலனுக்கு தீங்கிழைக்கும் தனது கோஷ்டிதான் புரட்சியின் தாங்கு தூணாக இருப்பதால் நீங்கள் தனது கோஷ்டிக்கு இழைக்கும் தீங்கு புரட்சிக்கு இழைக்கும் தீங்காகவே கருதப்படும்).

நாம் எமது தனிப்பட்ட தலைமையில் ஒரு கொரில்லா அணியை கட்டி வளர்க்க விரும்புகிறோம். இதனூடாக நாம் சமூகத்தில் முன்னுக்கு வர விரும்புகிறோம். கட்சி சாராத சில சுதந்திர புருஷர்களை எம்முடன் இணைத்துக்-கொண்டு இக்காரியத்தை செய்யலாம் என்றுள்ளோம். எமது இக்கொரில்லா அணிக்கு நாம்தான் ஆயுட்கால தலைவர்கள், யாரும் எமது தலைமையை அசைக்க முடியாது. யாருமே சவாலாக வரக்கூடாது என்பதற்காகத்தான் எமது அரசியல் குழுவையும் இராணுவத் தன்மை பெற்றதொன்றாக வைத்துள்ளோம். தேர்வுக்கோ விமர்சனத்துக்கோ இங்கு இடமில்லை. எமது கொரில்லா அணியினர் யுத்தத்தின் உடனடி இராணுவ இலக்கை மாத்திரம் புரிந்து கொண்டால் போதுமானது அதற்கப்பால் அவர்களுக்கு எதுவும் புரியத் தேவையில்லை. புரிந்துகொள்ள முற்படுவார்களானால் களைந்தெறியப்படுவார்கள். இன்று இராணுவ அடக்குமுறை மிக உக்கிரமானதாய் உள்ளதால் உழைக்கும் மக்களை அணுகாமல் அவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக மாறாமல் எம்மால் எமது தேசத்தில் ஒரு தங்குமிடத்தை அமைத்துக்கொள்ள முடியாது. அதேபோல் சர்வதேசிய ரீதியாகவும் சோசலிச கொள்கைகளை சார்ந்து நில்லாமல் ஏகாதிபத்தியத்தை எம்மால் எதிர்க்க முடியாது. ஆகவே, மார்க்சிச - லெனினிசத்தின் சில பகுதிகளை பயன்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. மற்றோர் புறத்தில் உழைக்கும் மக்களின் வர்க்க நலனை பிரதி-பலிக்கும் ஒரு கட்சியின் தோற்றத்தை தடுப்பதும் எமக்கு மிக இன்றியமையாதது. ஆகவே, நாம் மார்க்சிச-லெனினிசத்தை திரிபு படுத்த வேண்டியும் உள்ளது. அதன் ஆன்மாவைக் கொன்றுவிட்டு அதன் உயிரற்ற உடல் நடக்குமாப்போல் பாசாங்குகள் பண்ணுவதன் மூலமே எம்மால் இதைச் செய்யமுடியும். அதற்காகத் தான் நாம் மார்க்சிசம் - லெனினிசம் பேசுகிறோம்". இதுதான் டெப்ரேயின் உண்மையான

www.tamilarangam.net



ரூபமாகும். முகுந்தன் பாணியினரும் அவரைப் போன்ற வேறுபல தலைவர்களும் அதைதே தான் இன்று செய்கிறார்கள். சிலர் இதைத்தான் செய்ய மீண்டும் முயற்சிக்கிறார்கள்.

நாம் டெப்ரேயை நிராகரிக்கிறோம். வரட்டு சூத்திரவாதிகளையும் நிராகரிக்கிறோம் என்றால் நாம் செய்ய வேண்டியது என்ன? எமது சூழலுக்கு ஏற்ப கட்சி ஒன்று உருவாக்குவது எவ்விதம்?

உழைக்கும் மக்களின் பல்வேறு அணியைச் சார்ந்த இளைஞர்களையும் உள்ளடங்கியதே இன்றைய தமிழ் தேசிய விடுதலை அமைப்புக்களாகும். சிறு முதலாளித்துவ சித்தாந்தத்தைக் கொண்டிருப்பதாலேயே இவ்வமைப்புக்கள் சிறு முதலாளித்துவ இயக்கங்கள் என அழைக்கப்படுகின்றன. இவ்வமைப்புள் உள்ள வர்க்க அபிலாசையும் புரட்சிகர அபிலாசையும் கொண்டவர்களின் இந்த தன்னியல்பான அபிலாசைகள் உணர்வு பூர்வமான அபிலாசை கொண்ட நபர்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இவர்களின் அரசியல் அறிவை வளர்க்க திட்டமிட்ட அமைப்பு ரீதியான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். டெப்ரே கூறியதுபோல் யுத்தத்தின் இராணுவ அம்சத்தையும் இராணுவ இலக்குகளையும், இராணுவத்தின் அரசியல் இலக்குகளையும் உரை வைத்தால் போதாது. அமைப்புகளுள்ளும் வெகுஜனங்கள் மத்தியிலும் யுத்தத்தை முழுமையாக உணர்த்த வேண்டும். அனைத்து அங்கங்களிலும் செயற்பாட்டை புரிய வைக்க வேண்டும். அரசியல் அரங்கு, பொருளாதார அரங்கு, இராணுவ அரங்கு, கலாச்சார அரங்கு, சித்தாந்த அரங்கு ஆகிய பல்வேறு அரங்குகளிலும் யுத்தத்தின் செயற்பாடுகள் எவ்விதம் செயற்படுகிறது என்பதை புரிய வைக்க வேண்டும். ஜனநாயக புரட்சியின் முழுமையை உணர்வு பூர்வமாக புரிந்து கொள்ளும் நிலைக்கு அவர்களை உயர்த்த வேண்டும். இவ்விதமானவர்களைக் கொண்டு அமைக்கும் ஒரு அமைப்பே கட்சி உருவாக்கத்தில் நடைபெறும் முதலாவது படியாகும். இது கட்சியின் மூலக்கருவாகும்.

ஆயுதப் போராட்டமே பிரதான போராட்ட களமாக இருக்கும் இன்றைய காலகட்டத்தில் இவ்வித மூலக்கருவானது ஆயுதப் போராட்டத்தினூடாகவே உருவாக்கப்பட முடியும். ஆயுதப் போராட்டத்துடன் நேரடியாக தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் இருந்தே இவ்வித மூலக் கட்டொன்றி

www.tamilarangam.net



உருவாக்கத்திற்கு அவசியமான தோழர்களை தேர்ந்தெடுக்க முடியும். தேர்ந்தெடுக்கவும் வேண்டும். ஆயுதப் போராட்டத்துடன் நேரடித் தொடர்புபட்ட நடவடிக்கைகள் என்பது இராணுவ நடவடிக்கைகள் மாத்திரமல்ல. இதுவும் ஒன்று ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு சாதகமாக ஏனைய அங்கங்களில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளும் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளேயாகும். இவ்விதமான அணி திரட்டப்பட்ட தோழர்களையே அரசியல் தலைமையாக மாற்றவேண்டும். இவர்கள் அரசியல் அமைப்பை கட்டி வளர்ப்பதில் வேலைத் திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். கட்சியின் மூலக்கருக்களை வளர்த்தெடுக்கவும் உருவாக்கவுமான வேலைத்திட்டம் இவ்விதம் உருவாக்கி வளர்க்கப்படும் கட்சிக் கூறுகளான இராணுவத்துள்ளும் பல்வேறு வெகுஜன அமைப்பினுள்ளும் தேசிய விடுதலை முன்னணியுள்ளும் கலாச்சார அங்கங்களுள்ளும் செயல்பட ஆரம்பிக்க வேண்டும். சிறிலங்கா புரட்சிகர சக்திகளுடனும் சர்வதேச புரட்சிகர சக்திகளுடனுமான தொடர்புகளை அரசியல் வேலைத் திட்டங்களினூடாக பலப்படுத்திக் கொள்ளவேண்டும். இதன் மூலமே டெப்ரேயின் தத்துவப்படியான கொரில்லா அணிக்கான ஒரு அரசியல் தலைமையாக இருக்கும் நிலையைத் தாண்டி தேசிய விடுதலை யுத்தத்தினதும் புதிய ஜனநாயகப் புரட்சியினதும் ஒட்டு மொத்த தலைமைக்கு தகுதி பெற்றவர்கள் என்ற மட்டத்திற்கு இக்கட்சிக் கூறுகள் தம்மை வளர்த்துக் கொள்ள முடியும். இவ்வித நோக்குடன் ஏனைய இயக்கங்களினூடாகவும் வளர்ந்து வரும் கட்சிக்கூறுகளுடன் திட்டங்களின் அடிப்படையில் இணைவதன் மூலம் ஒரு தொழிலாளர் வர்க்க கட்சி ஒன்றின் உருவாக்கத்தை விரும்பும் நாம் எமது இவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எவ் விதத்திலும் பின்வாங்க மாட்டோம் என்ற உறுதியுடனும் பகிரங்க அறிவுறுத்தலுடனும் செயல்பட வேண்டும்.

இவ்விதமானதொரு கட்சியமைப்பு செயற்பாடு மிகவும் சிக்கலானதும் கடினமானதும் வளைவு சுழிவுப்பாதை கொண்டதுமாகும். சிறு முதலாளித்துவ தன்மை கொண்ட தேசிய விடுதலை இயக்கங்களே தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆதிக்கம் செலுத்துவதே இதற்கான காரணமாகும். இது கடினமானதே தவிர சாத்தியமற்றதொன்றல்ல. சிக்கலானதே தவிர, கட்சியின் தேவையை நிராகரிக்கும் ஒன்றல்ல. படிப்படியாகத்தான் கட்சி உருவாக முடியுமென்பதால் இராணுவம் அரசியல் கட்சியின் தலைமையின் கீழ் உருவாகுதலும் படிப்படியான ஒரு நடவடிக்கையாகவே இருக்க முடியும். இராணுவத்துள்

www.tamilarangam.net



அரசியல் கமிஷார் முறைகளை உருவாக்குவதே இராணுவத்தை கட்சியின் தலைமையின் கீழ் வைத்திருப்பதற்கான அமைப்பு வடிவமாகும். இக்கமிஷார்கள் கட்சி மூலக் கூறுகளின் அங்கத்தவர்களாக இருப்பார்கள். அதே நேரத்தில் இராணுவத்துள்ளும் கட்சி மூலக்கூறுகள் கட்டப்பட வேண்டும். அப்போதுதான் கட்சி தனது தலைமையை இராணுவத்திற்கு ஜனநாயக மத்தியத்துவமிக்க முறையில் கொடுக்க முடியும்.

இராணுவத்துள் புரட்சிகர அரசியலை வெற்றி பெறச் செய்தல்:-

இராணுவம் புரட்சிகர கட்சி ஒன்றின் நேரடித் தலைமையின் கீழ் உருவாக்குவதே இராணுவத்துள் புரட்சிகர அரசியலை வெற்றி பெறச் செய்வதற்கான அடிப்படை உத்தரவாதமாகும். ஏனைய நடவடிக்கைகள் எல்லாம் இவ்வடிப்படையை பயன்படுத்துவதற்காகவே அமையும் இரண்டாம் பட்ச நடவடிக்கைகளேயாகும். உண்மையிலேயே சற்று ஆழமாகப் பார்க்கப் போனால் இராணுவத்தை அரசியல் மயப்படுத்தல் என்ற பார்த்தை தவறானது. சாதாரணமட்டத்தில் இப்பதத்தைப் பிரயோகிக்கலாம். ஆனால் உயர்ந்த அரசியல் மட்டத்தில் இப்பதத்தை பிரயோகிப்பது தவறாகும். ஏன் எனில், இராணுவம் என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டதொன்று; அது அரசியல் கட்சிகளின் பேதங்களுக்கு உட்படாததொன்று, என்பதே சாதாரணமாக இன்று பொதுமக்கள் மத்தியில் நிலவும் கருத்தாகும். இராணுவத்தை அரசியல் மயப்படுத்தல் என்று நாம் கூறும்போது, நாமும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு அரசியல் தன்மையற்ற இராணுவத்தை அரசியல் மயப்படுத்தப் போகிறோம் என்றோர் அர்த்தம் தோன்றுகின்றது. இராணுவத் தோழர்களுக்கு அரசியல் வகுப்புகள் வைத்தால் இராணுவத்தின் மனோநிலை பழுதாகிவிடும் என்று அராஜகவாத அணியினர் கருதுவது இதன் காரணத்தால்தான்.

இராணுவம் அரசியலுக்கு அப்பாற்பட்டதொன்றா? அது அரசியல் தன்மையற்ற தொன்றா? இல்லை. இல்லைவேயில்லை. அது ஏதாவொரு வர்க்கத்தின் அரசியல் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அவ்வர்க்கத்தின் அரசியல் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் அமைக்கப்பட்ட, ஒரு பலாத்கார கருவியாகும்.

முதலாளித்துவ இராணுவம் முதலாளி வர்க்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்கின்றது. தொழிலாளர்களையும் ஏனைய உழைக்கும் மக்களையும் அடக்குவதற்

www.tamilarangam.net



அது உபயோகிக்கப்படுகின்றது. முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் கட்சிகளே இந்த இராணுவத்திற்கு தலைமை தாங்குகின்றன. இவ்வகை இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சகலரும் முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் முக்கிய உறுப்பினர்களாகும். முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் உள்ள நாடுகளில் இவர்கள் அக்கட்சிகளின் இரகசிய உறுப்பினர்களாக இருப்பார்கள். ஏனைய முதலாளித்துவ நாடுகளில் இவர்களே பிரதான கட்சி உறுப்பினர்களாக இருப்பார்கள். ஆம், இவர்கள் ஏககாலத்தில் அரசியல் கமிஷார்களாகவும், இராணுவ கமாண்டர்களாகவும், செயல்படுவார்கள். முதலாளித்துவ இராணுவத்தின் மனோநிலையானது கூலி அடிமை மனோபாவம், காமவெறி, கொலைவெறி, மனிதாபிமானம் என்பது கிஞ்சிற்றும் இல்லாத்தன்மை, சூறையாடலில் இன்பநாட்டம், உயர் அதிகாரிகளுக்கு இயந்திர ரீதியாக கீழ்ப்படியும் மனோபாவம், தன் சொந்த பாதுகாப்பை அல்லது பதவி உயர்வை எல்லாவற்றிலும் மேலானதாக கருதும் தன்மை ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும். இவை முதலாளித்துவ இராணுவத்தின் பொதுவான மனோநிலையாகும். இம்முதலாளித்துவ இராணுவம் குறிப்பிட்டதொரு காலகட்டத்தில் எந்தவிதமான பரந்த இராணுவ அடக்குமுறையில் ஈடுபடுகிறார்களோ, அதற்கொத்த குறிப்பான மனோநிலையைக் கொண்டதாக இருக்கும். உதாரணமாக, இடது சாரி எழுச்சியை அடக்கும்போது, இது கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான உணர்வைக் கொண்டதாக இருக்கும். 1971 ஏப்ரல் கிளர்ச்சியை அடக்கிய சிறிலங்கா இராணுவம் சிங்கள இளைஞர்களையும் யுவதிகளையும் மிக மிலேச்சத்தனமாக கொன்று குவித்தது. அக் கட்டத்தில், இவ் இராணுவம் தமிழ் மக்களுடன் மிகப் பவ்வியமாக நடந்துகொண்டு நேச உறவுகளைப் பேணியது. தமிழ் இனத்திற்கு மேலான இராணுவ அடக்குமுறையை மேற்கொள்ளும் இன்றைய கட்டத்தில், அதே முதலாளித்துவ இராணுவம் தமிழ் இளைஞர்களை மிலேச்சத்தனமாக கொன்று குவித்து வருகிறது. இம் முதலாளித்துவ இராணுவத்தின் ஒரு பகுதியினர் 'புலிகளுக்கு' எதிரான வெறுப்புக் கொண்டவர்களாக உள்ளார்கள். இவர்கள் தமிழ், சிங்கள, முஸ்லீம் என்ற பேதமின்றி அனைத்து இனத்தை சார்ந்த இளைஞர்களையும் இம்சித்து வருகிறார்கள். முதலாளித்துவ இராணுவத்தை நினைத்த நேரத்தில் நினைத்த விதத்தில் ஏவிவிடுவதற்காக, இதனது மனோவியலானது கும்பல் மனோவியலாக (மொப் சைக்காலஜி) வளர்க்கப்படுகிறது.

முதலாளித்துவ இராணுவம், 'எந்த விடயங்களை செய்வதற்கும், இக் கும்பல் மனோவியல் போக்கே பயன்படுத்தப்படுகிறது. தமிழ் இன அழிப்பில்

www.tamilarangam.net



கிழக்கு மாகாணத்தவர்களை பெரும்பான்மையாக கொண்டது. ஆகவே அது கிழக்கு மாகாணத்திற்கு வேலை செய்யும் என்று கூறுவதும், எமது இராணுவத்தில் ஒடுக்கப்பட்ட சாதியினர் பெரும்பான்மையாக உள்ளனர். ஆகவே அது ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு சேவை செய்யும் என்று கூறுவதும் இவ் அர்த்தத்தில்தான். அப்படியானால் முதலாளித்துவ இராணுவத்தின் பெரும்பான்மையினர் உழைக்கும் மக்களின் புதல்வர்களும் புதல்விகளேயாகும். இவர்கள் கூற்றுப்படி முதலாளித்துவ இராணுவம் ஒருபோதும் உழைக்கும் மக்களுக்கு எதிராக ஒருபோதும் செயற்பட மாட்டாது. ஒரு இராணுவத்தின் வர்க்க சுபாவத்தை தீர்மானிப்பது அப்பலாத்கார கருவியை நிறுவனமையப்படுத்துவது யார்? என்பதிலேயே தங்கியுள்ளது. யார் என்பது இங்கு எந்த தனிநபர் என்பதல்ல, எந்த வர்க்கம் என்பதேயாகும். முதலாளி வர்க்கம் தனது வர்க்கத்தேவைக்கு ஏற்பவே தனது பலாக்கார கருவியான இராணுவத்தை நிறுவனமையப்படுத்துகின்றது. இதை சாத்தியப்படுத்த வேண்டுமானால் அது தனது படையை தனது வர்க்க கமிட்டியின்கீழ் வைத்திருப்பதை உத்தரவாதப்படுத்துகின்றது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சகல அதிகாரிகளும் முதலாளித்துவ வர்க்க அபிலாசை கொண்ட நபர்களாகவே இருப்பார்கள். இவர்களே இந்நிறுவனத்தின் இயக்கு சக்திகளாகும். உழைக்கும் மக்களின் புதல்வர்களும் புதல்விகளும் இங்கு இயங்கு சக்திகளாகும். பலிக்கிடாய்களேயாகும். இதை நிறைவேற்றுவதற்காக இவர்கள் தமது வர்க்க உணர்வை இழந்தவர்களாக்கப்பட்டிருப்பார்கள். அடிமை மனோபாவமும், கும்பல் மனோபாவமும் உள்ளவர்களாக உருவாக்கப்பட்டிருப்பார்கள். இவ்விதம் செய்வதன் மூலம் மாத்திரமே முதலாளித்துவத்தால் தனது இராணுவத்தை தனது வர்க்கமயப்படுத்த முடியும். தனது வர்க்க சுபாவத்தைக் கொண்டதொன்றாக பாதுகாத்துக் கொள்ள முடியும். முதலாளித்துவம் இதற்கான வேலையை தொடர்ந்து ஓய்வின்றிச் செய்து கொண்டே இருக்கின்றது. இதனையே முதலாளித்துவம் தமது இராணுவத்தை அரசியல் மயப்படுத்துகிறது என குறிப்பிடலாம்.

எமது இராணுவத்தை நாம் அரசியல் மயப்படுத்துவது என்பதை நாம் இந்த அர்த்தத்திலேயே பாவிக்கவேண்டும். எமது இராணுவத்தின் வர்க்க சுபாவம் என்ன? என்பதைப் புரிந்து கொண்டாலே அதை அரசியல் மயப்படுத்தல் எவ்விதம் என்ற கேள்விக்குள் உட்புகலாம்.

இக்கேள்வியைக் கேட்டவுடனேயே எம்மில் சில அராஜகவாதிகளுக்கும்

www.tamilarangam.net



ஈடுபடும்போது சிங்கள மக்களின் சகல பகுதியினருடனும், "நல்லுறவை" 'சிரித்துப் பழகும் உறவை' வைத்துள்ளது. இடதுசாரி எழுச்சியை அடக்கும் காலகட்டத்தில், அது மேல்தட்டு வர்க்கத்தினருடனும் கம்யூனிச எதிர்ப்பு பகுதியினருடனும், 'நல் உறவை' வைத்திருக்கும். வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடும்போது, இவ் இராணுவம் இனமொழி வேறுபாடின்றி சகல தொழிலாளர்களையும் அடக்கும். அதேபோன்று, இனமொழி வேறுபாடின்றி சகல முதலாளிகளுடனும் 'நல்லுறவு' வைத்திருக்கும். இதுதான் முதலாளித்துவ இராணுவ மனோவியலாகும். அது கும்பல் மனோவியலை அடிப்படையாக கொண்டதேயாகும்.

இம் முதலாளித்துவ இராணுவத்தின் கட்டமைப்பைப் பொறுத்த வரையில் அங்கு கீழ்மட்டங்களுக்கு ஜனநாயகம் என்பது மருந்துக்குக்கூட காணக்கிடைக்காத ஒன்று. அதே நேரத்தில் மேல் மட்டங்களுக்கோ கீழ்மட்டங்களை தமது சொந்த சேவகர்களாக கூட பயன்படுத்தும் ஜனநாயகம் உண்டு. அதிகாரத்துவ அடுக்குகளே அமைப்பு வடிவமாகும்.

முதலாளித்துவ இராணுவமென்பது அனைத்து அம்சங்களிலும் முதலாளித்துவ தன்மை கொண்டது. பொதுவான இராணுவம் என்று எதுவுமே இல்லை. இராணுவம் ஒரு வர்க்கத்தின் நிறுவனமயப்படுத்தப்பட்ட கருவி என்பது மாத்திரமல்ல அதுதானே' தன்மட்டில் ஒரு வர்க்க குணாம்சம் கொண்ட அமைப்பாகும். துப்பாக்கி ஒரு பலாத்கார கருவி. ஆனால் இது தானே தன்மட்டில் ஒரு வர்க்க சுபாவம் கொண்ட கருவியல்ல. வர்க்க போராட்டத்திற்கு பயன்படுத்தப்படும்போது மாத்திரமே இது வர்க்க சேவகம் பெறுகின்றது. இதுவும் தனக்கென்றுள்ள தனியான குணம்சத்தால், அது யாரால் பயன்படுத்தப்படுகின்றதோ அந்த வர்க்கத்தின் குணம்சத்தாலேயாகும். ஆனால் இராணுவம் இவ்விதமானதல்ல. இது தனக்கென்று தனியான வர்க்க சுவாசம் கொண்டவை. முகுந்தன் பாணியினர் இன்னமும் கூட அதாவது இவ்வளவு அனுபவத்தின் பின்பும் கூட 'இராணுவம் என்பது இராணுவம்-தான்' முதலாளித்துவ இராணுவம் சோஉஷலிஸ இராணுவம் என இருவகை கிடையாது என இன்னமும் கூட வாதிட்டு வருவது விநோதமானதே.

ஒரு இராணுவத்தின் குணம்சத்தை தீர்மானிப்பது எது? அதன் அங்கத்தவர்களின் வர்க்கத் தோற்றுவாயா? அராஜகவாதிகளும், முகுந்தன் பாணியினரும், ஆம் என்றுதான் சொல்வார்கள். இவர்கள், எமது இராணுவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முருந்தன் பாணியினருக்கும் முகச் சுழிப்பு ஏற்படுவது இயற்கையானதே. முதலாளித்துவ இராணுவத்திற்கும், தொழிலாளி வர்க்க இராணுவத்திற்குந்தான் வர்க்க சுபாவம் இருக்க முடியும். எமது இராணுவமோ விடுதலை இராணுவம். அதற்கு எவ்-விதம் வர்க்க சுபாவம் இருக்க முடியும் என்று இவர்கள் விருட்டென்று விறைப்பாக பெரும் வீரர்களைப்போல் கேட்பார்கள். நல்லது, வர்க்க பேதமுள்ள ஒரு சமுதாயத்தில் மனிதர்களுக்கிடையேயான உறவுகளை அடிப்படையாக கொண்டெழும் அனைத்துச் செயற்பாடுகளும் வர்க்க சார்பு கொண்டவையே, என்பது இவர்களுக்கு புரியுமா? யுத்தமும் படையும் மனிதர்களிடையேயான உறவுகள் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனையில்லாமல் வேறென்ன. காதல், பாசம், அன்பு, அழகு, வீரம், கலை இலக்கியம், மனிதாபிமானம், மனித நேயம் ஆகிய சகலதுமே வர்க்க சார்புள்ளவை. வர்க்க சுபாவம் பெற்றவை.

நாம் என்ன நோக்கத்துடன் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடு-படுகின்றோம். புதிய ஜனநாயக குடியரசை நிறுவுவதற்காகவே நாம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். அதாவது தொழிலாளி-விவசாயிகளின் அரசியல் அதிகாரத்தை நிறுவுவதே எமது நோக்கம். இது வர்க்க சார்பில்லாத அபிலாசையா? ஒரு வர்க்கம் ஆட்சிக்கு வர முற்படுவது வர்க்க சார்பில்லாமல் வேறு என்ன? தேசிய விடுதலையை நாம் நோக்கும் விதம் வர்க்க சார்பில்லாமல் வேறென்ன? டி.யு.எல்.எப்.கூட்டணி எதற்காக விடுதலை போராட்டத்தில் ஈடு-படுகின்றது. தமிழ் ஈழ முதலாளி வர்க்கமும், நிலவுடமை வர்க்கமும், ஏனைய ஆளும் வர்க்கங்களும் தமது பொருளாதார, அரசியல் அதிகாரங்களை இழந்து விடாமல் இருப்பதற்காகவும் தமது வர்க்க நிலைமை மேலும் உயர்த்திக் கொள்-வதற்காகவுமே அவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இது வர்க்க சார்பற்றதில்லையா? இதற்கு வர்க்க சுபாவம் இல்லையா? தேசிய விடுதலைப் போராட்டம் வர்க்க சுபாவம் கொண்டதேயாகும். அதைக்-கொண்டு நடாத்தப் பயன்படும் கருவிகளில் ஒன்றான இராணுவமும் வர்க்க சுபாவம் கொண்டதேயாகும்.

அவ்விதமானால் நாம் எமது இராணுவத்தை அரசியல் மயப்படுத்துவதற்காக செய்ய வேண்டியவை யாது?

www.tamilarangam.net



1) கட்சிக் கூறுகளை உருவாக்குவதும், அதன் தலைமையின் கீழ் ,இராணுவத்தை உருவாக்குதல்.

2) இராணுவக் கமாண்டோக்களைக் கூட நியமிக்கும் பொறுப்பு கட்சிக் கூறுகளையே சார்ந்ததாக இருக்கும் நிலையை உருவாக்குதல்.

3) ஒரு கள நடவடிக்கைக்கான உத்தரவைத் தவிர்ந்த ஏனைய விடயங்களில் முடிந்தவளவு ஜனநாயக-மத்தியத்துவ கோட்பாட்டைக் கடைப்பிடித்து செயற்படல். இதற்கான ஒழுக்கக் கோவைகளை வகுத்துக் கொள்ளல்;

4) எந்தவொரு இராணுவ ஒழுங்கும் பெரும்பான்மையான இராணுவ அங்கத்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளாக இருக்க வேண்டுமே, தவிர மேலிருந்து திணிக்கப்பட்டவைகளாக அமையாமல் பார்த்துக் கொள்ளல்;

5) இராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையேயான நல்லுறவை பாதுகாத்துக்கொள்வதில் மிகுந்த அக்கறையும் செலுத்துவதும் திட்டவட்டமான வேலைத்திட்டத்தை பின்பற்றலும்;

6) தொழிலாள வர்க்க உணர்வை இராணுவத்தின் உணர்வாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுத்தல்;

7) இராணுவப் படையை வளர்ப்பதில் ஒரு வர்க்கப் பார்வையை மேற்கொள்ளல். அதாவது அங்கத்தவர்களை சேர்ப்பது, உயர் அதிகாரங்களை வழங்குவது போன்ற பிரச்சினைகளில் அவர்களின் வர்க்க தோற்றமும், சமுகத்திலுள்ள வர்க்கத் தொடர்புகளும் மிகவும் ஆழ்ந்து கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். அதற்கான மூலமான கோட்பாடுகளை வகுத்துக் கொள்ளல்.

இவையே எமது இராணுவத்தை அரசியல் மயப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளாகும். இங்கு இராணுவத்தை அரசியல் மயப்படுத்துவது பற்றி மாத்திரமே கூறப்பட்டுள்ளது. இதுதான் அடிப்படை அதன் பின்னர்தான் அதனுடைய இராணுவத்திறனை வளர்ப்பது பற்றிய பிரச்சினையாகும்.

– ஆக்கம் – "சச்சி".

www.tamilarangam.net



சிறு முதலாளிய சித்தாந்த, சந்தர்ப்பவாத, மாக்சிய அரசியல் பாதை, சுத்த இராணுவ கண்ணோட்டப்பாதை இவற்றை விமர்சனத்துக்குள்ளாக்கி புரட்சிகர மார்க்சிய-லெனினிய அரசியல் பாதையில் தமிழீழ தேசிய விடுதலைப் போரை முன்னெடுத்தல் என்ற சிறு வெளியீட்டின் முன்னுரைப் பகுதி:

"எமது தேசிய விடுதலைப் போராட்டமானது தனது ஒரு கட்ட வளர்ச்சியின் இறுதியில் வந்தடைந்திருக்கின்றது. உலகெங்கனும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் முகங்கொடுத்த, முகங்கொடுத்துக் கொண்டிருக்கிற அதே நிலைமைகள் எம்முன்னுல் மலையென நிற்கின்றன. விடுதலைப் போராட்டமானது தனது வளர்ச்சிப் போக்கிற்கு ஏற்ப, இவ்வளர்ச்சியானது பூரணத்துவமற்ற-தொன்றாகவோ, ஒரு தலைப்பட்சமானதாகவோ, எப்படியிருந்தாலும் தாண்டி செல்ல வேண்டிய, தகர்ந்தெறியப்பட வேண்டிய நோக்கத்துடனான தர்க்கங்கள், வாதப்பிரதிவாத அலைகளை எழுப்பியுள்ளது.

இத்தர்க்கங்கள் தற்போது அடைந்து வரும் உயர்ந்த பரிமான அளவுக்கு இல்லாதுவிடினும், போராட்ட வரலாற்றில் ஒவ்வொரு நெருக்கடி கட்டத்திலும் சுமாரான வளர்ச்சிப் போக்கில் இருந்து வந்துள்ளது.

ஆனால், நடைமுறை வேலைகளில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டதும், இவ்வரசியல் தர்க்கப் போராட்டங்களும் கைவிடப்பட்டோ அல்லது அவசியமல்லாத ஒன்றாக கேலிக்குரியதாக்கப்பட்டோ வந்துள்ளது.

இன்று அனைத்து வழிகளிலும் எதிரி பலமாகியுள்ள நிலைமை, விடுதலை இயக்கபோக்கில் பிற்போக்கு முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு, இந்திய விரிவாதிக்க அரசு சார்பு இயக்கங்கள், அதிகார வர்க்கங்கள் பல்ப்பட்டுள்ள சூழல், மக்களுக்கும் போராளிகளுக்கும் இடையிலான மலை போன்ற இடைவெளி...

இதுபோன்ற நெருக்கடிகள் வெறும் நடைமுறை நெருக்கடிகள்தானா? எமது போராட்டத்தை சற்று தொடர்ச்சியாக கவனமெடுத்து பார்த்து வரும் எவரும் இவற்றை அவ்வாறு பார்க்க மாட்டார்கள்...

விடுதலைப் போராட்டம் பற்றிய பெரிய கேள்விக்குறியை முன்னால் இட்டுவிட்டு, அரசியல் வகைப்பட்ட பிரச்சினைகளாக, சித்தாந்த வகைப்பட்ட பிரச்சினைகளாக, இராணுவ விஞ்ஞானப் பிரச்சினைகளாக திரண்டு நிற்பவையே இவை

www.tamilarangam.net



இயக்கங்களிற்கும் -- இயக்கங்களிற்கும் இடையிலானதோ அன்றி, கோஷ்டிகளுக்கும் மற்றைய குழுக்களுக்கும் இடையிலானதோ அன்றி எதிரி மீதான இராணுவ தாக்குதல்கள் சிலவற்றை போன்றதோ எவ்வகைப்பட்ட போராட்டங்களும் இப்பிரச்சினைகளை தீர்க்கும் சக்தியற்றவை.

இப்பிரச்சினை சாராம்சத்தில் விடுதலைப் பயணத்தின் அடுத்த அடியை எங்கே வைப்பது சம்பந்தமான அரசியல்-சித்தாந்த பிரச்சினையேயாகும்.

இப்பிரச்சினையின் உள்ளடக்கத்தை புரிந்து கொள்ளாது அல்லது பார்க்க மறுத்து பார்ப்பவர்களை பழமையான பாணியில் நிராகரிக்கும் ஒதுக்கி வைக்கும் போக்கானது ஏற்கனவே விமர்சிக்கப்பட்டவை போல வெறும் தவறுகள் அல்ல, வரலாற்று துரோகங்களாகும்.

பொதுவான அர்த்தத்தில் நடைமுறை வேலைகளை பற்றி பேசுகிறார்களே ஒழிய, இயக்கப் போக்கை வளர்த்தெடுப்பது பற்றிய பிரச்சினைகளை நிராகரிக்கிறார்கள். இந்த நிராகரிப்பானது எந்த வர்க்கத்தின் அரசியல் நோக்கத்தை நிறைவேற்றக் கூடியது என்பது வெகுவிரைவில் வெளிப்படும்.!!

* * * * *

<u>எனக்கொரு</u>

<u>அமைதியும்</u> <u>பொருள்</u>

<u>உனக்கொரு</u>

அந்த பெரிய அந்நிய மூலதன முதலாளி
வேலை நிறுத்தம் செய்யும் பட்டினித் தொழிலாளர்களிடம்
சொன்னான்:

"அமைதியாய் இருங்கள்! --- இல்லையெல் வேலையை
இழக்க நேரிடும்!"

அந்த கொழுத்த நிலச்சுவான்தார்
குறைகளை முறையிடும் விவசாயிகளை
மிரட்டினான்:

www.tamilarangam.net



"அமைதியாய் இருங்கள்! --- இல்லையேல் இந்த நிலத்திலேயே
உங்களை புதைத்துவிடுவேன்"

பதவிப்பசி பிடித்தலையும் அரசு உயர் அதிகாரி மனித உரிமைகளுக்காக
குரல் கொடுக்கும் மனிதர்களிடம் எச்சரித்தான்:

"அமைதியாய் இருங்கள்! --- இல்லையேல் சிறையிடைப்பேன்;
என்றென்றைக்கும் பேசஇயலாதவாறு செய்து, மீளாத்துயில்
கொள்ள அனுப்பிவிடுவேன்!"

மக்கள் ஒன்றும் புரியாமல் அலைந்தனர்.
அமைதி என்றால் என்ன? --- போர் என்றால் என்ன?

சுதந்திரத்திற்காக போராடிய தங்கள் முன்னோர்களின்
இரத்தத்தால் புனிதமாக்கப்பட்ட வயல் வெளிகளிலிருந்து
வந்த காற்று, அந்த செய்தியோடு வந்தது".

"ஸ்பானிஷ்காரர்கள்

அன்பை சகோதரத்துவத்தை, அமைதியை
போதிக்கும் சிலுவையோடு இங்கு வந்தனர்.
போதனைகளை வாள்முனையில் எங்கள் மீது திணித்துவிட்டு.
பதிலுக்கு எங்கள் செல்வங்களை அபகரித்தனர்.
நியாயமான ஒரு போர் தொடுத்தோம் நாங்கள்...
அதில் வென்றுவிட்டோம்
நாட்டுச் சொத்துக்கள் எல்லாம் மக்கள் சொத்தாக மலர்ந்தது.

எங்கும் அமைதி ஆனந்தக் கூத்தாடியது.
ஆனால் வெகு காலத்திற்கு இல்லை... ஒரு புதிய

இன்னும் புத்திசாலியான
இன்னும் கொடூரமான
இன்னும் பலசாலியான் ஆக்கிரமிப்பாளன் வந்தான்.

நாங்கள் மறக்கப்பட்ட 2,00,000 தியாகிகள் அமெரிக்கா-பிலிப்பைன்
யுத்தத்தில் கடுமையாக போரிட்டும்--- தோற்றுவிட்டோம்..

www.tamilarangam.net



எங்களது அறிவு ஜீவத்தலைமை எங்களை ஏமாற்றிவிட்டது.
அமெரிக்க ஆக்கிரமிப்பாளனின் நவீன யுதங்களுக்கெதிராய்
எம்மால் எதுவும் செய்ய முடியவில்லை.
அதன்பின் அமெரிக்க ஏகாதிபத்தியமும், எங்களது
ஏமாற்றுத் தலைமையும்
இணைந்து அமைதியை நிலைநிறுத்தினர்.
அநியாயங்களால் வேயப்பட்ட அமைதியை நிலைநிறுத்தினர்.

பின்னர் மக்கள் மலைகளை நோக்கி தவழிருந்தனர்.
தங்கள் விடிவு காலத்திற்காக காத்திருந்தனர்.

எப்போதும் தூய்மையாயும், சுதந்திரமாயும் திரியும் மலைக்காற்று
உடனே ஒரு செய்தியை கொண்டு வந்தது.

சீனப் போராளியும் கவிஞனுமான அவனது
வைர வரிகளைக்கொண்டு வந்தது.

"போரை ஒழிக்க முனைவதில் நாங்கள் முன்னோடிகள்
நாங்கள் போரை வெறுக்கிறோம். ஆனால் ஏகாதிபத்தியங்களும்
எங்களது ஏதோ சதிகாரிகளும், அடக்குமுறையாளர்களும்
மக்களை வதைத்து கொல்லும்போது, நாங்கள் வாளாவிருக்க
இயலாது... அதனால்தான் நியாயப்போர்.
அநியாயப் போரை முடிவுக்கு கொண்டுவர
துப்பாக்கியின் குறியில் இருந்து தப்பிக்க
ஒரு துப்பாக்கியை கைப்பற்றுவது தவிர்க்க இயலாததாகிவிட்டது"

பின்னர் அந்த சிறிய அதிகார தலைமையை நோக்கி
மக்கள் கூட்டம் குரல் கொடுக்க துவங்கியது.

"நீயும் அமைதி பற்றி பேசுகிறாய், ஆனால்
எல்லோருக்கும் பொதுவான தாயகத்தின் வளங்களை
நீ மட்டும் தனியே சுரண்டிக் கொள்கிறாய்".

"நீயும் அமைதி பற்றி பேசுகிறாய், ஆனால்

www.tamilarangam.net



உன் சதிச்செயல்களை மக்கள் மேடைக்கு ஏற்றிய
தேசத்தின் ஏராளமான இளம் கருத்துக்களை
நீ அநியாயமாக சாகடித்தாய்.

... ஒரு கொடூரமான கழுகு
பாதுகாப்பற்ற, உதவியற்ற, வெண்புறாவை குறி வைத்து
குதறுவதைப்போல...

"ஆமாம் நீயும் அமைதி பற்றி பேசுகிறாய். ஆனால்
உன் இரத்த கறைபடிந்த கைகளுக்குள் இருக்கும்
பலி கொடுக்கும் பட்டாக் கத்திகளை
முதுகுக்கு பின்னால் மறைக்கப் பார்க்கிறாய்".

"நாங்கள் அமைதியை விரும்புகிறோம்.
ஆனால் நீதியின் மீது நிறுவப்பட்ட அமைதியை,
நியாயத்தின் மீது கட்டப்பட்ட அமைதியை,
அது கிடைக்காவிடில்
உன்மீது ஒரு நியாயப் போர் தொடுப்போம் நாங்கள்".

— மெம்பர்பாயன் – பிலிப்பைன்ஸ் —

* * * * * * *

ஜனநாயக சக்திகளே.... தேசபக்தர்களே.... புரட்சியாளர்களே....

இலங்கையின் அரசியல் நிலவர போக்கில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் மிகவும் வேகமானவையாகவும், எதிர் புதிர் தன்மை கொண்டதும், பல்வேறு விதமான புதிய சிக்கல்களை உருவாக்குவதாகவும் உள்ளது. இனம், மொழி, மதம், சாதி, பிரதேச வேறுபாடுகளை மேலும் மேலும் வளர்த்து அவற்றின்மூலம் தமது பிற்போக்கு வர்க்க நலன்களையும், அரசியல்

www.tamilarangam.net



இலாபங்களையும் தேடிக்கொள்ளும் சக்திகள், உழைக்கும் மக்களை ஒட்டச் சுரண்டிக் கொள்ளவும் அவர்களின் வர்க்க உணர்வுகளை சிதறடித்து அவர்களை ஐக்கியப்படவிடாமல் தடுக்கவும் போராட்டங்களுக்கு வேட்டு வைக்கும் சமூக பிற்போக்கு வர்க்கங்களும் அவர்களுக்காக இறக்கும் கட்சிகளின் ஆதிக்கமே இலங்கை அரசியலில் மேலோங்கியுள்ளது.

யு.என்.பி. தலைமையிலான இலங்கை இனவாத அரசின் ஏகாதிபத்திய அன்னிய சார்பு பொருளாதாரக் கொள்கையானதும், நாட்டின் மொத்த பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியும், அத்தியாவசிய பொருள்களின் கட்டுப்பாடும், கறுப்புச் சந்தை வளர்ச்சி, விலைவாசி உயர்வு, கல்விப்பிரச்சனை தொழில் இல்லா பிரச்சனை, வறுமை, பசி, பட்டினி, இவற்றின் விளைவாக மக்கள் மத்தியில் ஏற்படும் சமூக பொருளாதார அரசியல் போராட்டங்களும் சாவுகளும் ஒருபுறம். மக்களின் அடிப்படை பிரச்சனைகள் எவற்றையும் தீர்க்க முடியாத, விரும்பாத தரகுமுதலாளித்துவ அதிகாரத்துவ அரசானது, ஏகபோக மூலதனங்களையும் அன்னிய நுகர்வு பண்டங்களையும் திறந்த வெளிச்சந்தை கொள்கைக்-கொள்ளை மூலம் உள்ளே கொண்டு வந்து முழுத்தேசத்தின் பொருளாதார வளங்களையும் மக்களின் கடும் உழைப்பையும் விதேசிநாடுகள் கொள்ளையடித்து செல்ல அனுமதிக்கின்றது சீரளிவு கலாச்சாரத்தை வளர்த்து மக்களின் போராட்ட உணர்வுகளையும், பண்பாட்டு போக்கையும் திசைதிருப்பி மேற்கத்திய மோகத்தை வளர்க்கின்றது.

முதலாளித்துவ சனநாயக அமைப்பில் காணப்படும் உரிமைகளைக் கூட இல்லாமல் செய்து மக்களின் எவ்வகையான சமூக கோரிக்கைகளையும், அதிகார வர்க்கத்தை கொண்டும், இராணுவம், போலீஸ் மற்றும் ஆளும்வர்க்க கட்சிகளால் கட்சிகளால் கட்டப்படும் விசேட காடையர் படைகள்மூலம் அடக்கி ஒடுக்கி இரத்த சாட்சியங்களைக் காட்டி பயமுறுத்துகின்றது.

மறுபுறம் இலங்கை பேரினவாத அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தமது பொருளாதார அரசியல் சுதந்திரத்துக்காகவும் போராடும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இயக்கங்களுள்ளும், சிங்கள பேரினவாத அரசின் இன அடக்குமுறைக்கு எதிராக போராடும் தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள இயக்கங்களுள்ளும், மத்தியிலும், காணப்படும் சிறு முதலாளிய வர்க்க தன்மையும் சுத்த இராணுவ கண்ணோட்ட

www.tamilarangam.net



பாதையும் இதன் விளைவான தவறான போராட்ட மார்க்கங்களும், அராஜகவாத அணுகுமுறைகளும், போட்டி இயக்கங்களுக்கு இடையிலான மோதல்களும் மக்களின் அன்றாட வாழ்வில் மேலும் சகித்துக்கொள்ள முடியாத நிலைமையை உருவாக்கி தந்துள்ளது.

இது போன்ற பாசிச அரசியல் சூழ்நிலைமையில் வாழ்நாளை எண்ணி சிக்கித்தவிக்கும் ஆளப்படுகின்ற வர்க்க மக்களும், ஒடுக்கப்படுகின்ற தமிழ் தேசிய இன மக்களினதும், வாழ்நிலை இருத்தலையும் அவர்களின் சுதந்திரத்தை சனநாயகத்தை, விடுதலையை, இவற்றை சாதிக்கக்கூடிய பொதுவுடைமை சமூக அமைப்பை நேசிக்கின்ற, அதற்காக போராடுகின்ற ஒவ்வொரு சனநாயகவாதியும், தேசபக்தனும் புரட்சியாளனும் இன்றைய சூழ்நிலையில் தனது சமூகப் பணியை புரிந்து கொள்ளவேண்டும். சரியான திசையை நோக்கி தெளிவான அணுகுமுறையை பின்பற்றி செயற்படவேண்டும்.

கடந்த பத்தாண்டுகளாக சிங்கள பேசினவாத அரசின் கொடூரமான இன ஒடுக்குமுறைக்கும், இனப்படுகொலைக்கும் எதிராக தமிழ் மக்கள் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான பிரிந்து போகின்ற உரிமையுடன் கூடிய விடுதலைக்கான போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். இலங்கை அரசுக்கு அரசியல், பொருளாதார இராணுவ அரங்குகளில் பெரும் நெருக்கடியையும், அச்சுறுத்தலையும் கொடுத்துக்-கொண்டு இருக்கின்றது. இலங்கையின் அரசியல் நிலவரத்தை தீர்மானிப்பதில் பிரதான பாத்திரத்தை தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் வழங்கிக்கொள்கிறது. இலங்கையின் உள்விவகாரங்களில் இந்திய விரிவாதிக்க அரசின் மறைமுக, நேரடி தலையீடும் வளர்ந்தது இந்த காலகட்டத்தில்தான் என்பதையும் நன்றாக மனதில் கொள்வோம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் (1987ல்) நடந்தேறிய பின் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் சிறு முதலாளிய சித்தாந்தமும் அவ்வர்க்க தன்மை கொண்ட கலகங்களும் தமது பாதையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திக்கொண்டன. இவ்வொப்பந்தமும், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வருகையும், இலங்கையின் முழு அரசியல் நிகழ்விலும், அதிகார அமைப்பு முறையிலும் உருவாக்கிய தாக்கங்களின் குறிப்பிடக்கூடிய விளைவுகளே

www.tamilarangam.net



இன்றைய நடைமுறை அரசியல் சிக்கல்களாக, கொள்கை வழிப்பட்ட பிரச்சனைகளாக பரிணமித்து நிற்கின்றது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்பது அதன் உள்ளடக்க அளவில் இலங்கை தோன இந்திய விரிவாதிக்க வாதிகளின் நுழைவுக்கும் பிராந்திய ஆதிக்க முயற்சிக்கும் ஒரு வெளிப்படை உதவி கொண்ட உள்நோக்க சாதனம். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட வளர்ச்சிப் பாதையில் ஒரு இடைநிறுத்தம். இந்த இரண்டு தலைப்புகளுள் ஒப்பந்தத்தின் அனைத்து சரத்துக்களும் அடங்கிவிடக் கூடியவை. இந்திய விரிவாதிக்க அரசின் கைகளையும் மீறி இப்பிராந்தியத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டுவிடாதபடி தனது பிராந்திய கொள்கைக்கு சார்பான இயக்கங்களைக் கொண்டு அதேவேளை இலங்கை முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்ற தீய நோக்கில் இருந்து இந்தியரசின் பெரும் கள்ளத்தனமிக்க பொறுப்பில் உருவாகியதுமாகும். இவ்வொப்பந்தம் தெற்காகிய பிராந்தியத்தில் இந்தியரசின் பொருளாதார, இராணுவ, அரசியல் இலாப நோக்கங்களுக்கு உட்பட கட்டுப்பட மறுக்கும் அண்டை நாடுகளை அந்நாட்டு அரசுகள் மீதான பலவழி நிர்பந்தங்கள் ஊடாக. அந்த அரசுகளும் விநம்பிக்கையெழுத்திடும் ஒப்பந்தங்கள்போல மக்களை நம்ப வைத்து தனது பொருளாதார இராணுவ நோக்கங்கள சாதிக்க முயற்சிப்போன என்பதை பிராந்திய நாடுகளுக்கு உணர்த்திய முன்னெச்சரிக்கை ஒப்பந்தமாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வொப்பந்தத்தின் பின்நாடு தழுவியளவில் ஏற்பட்ட மக்களின் எதிர்ப்பு போராட்டங்களும், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிராக தமிழீழ மக்களின் இரண்டாண்டு கால ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தமும் ( யே-தான் இவ்யுத்தத்துக்கு தலைமை பாத்திரம் வழங்கியது) இலங்கை மக்களின் இந்திய-விரிவாதிக்க எதிர் புணர்வுகளுக்கு முன் தாக்குபிடிக்க முடியாமல் தினமும் இலங்கை ஆளும்வர்க்க கட்சிகளின் சந்தர்ப்பவாத எதிர்புணர்வும் ஒன்று திரண்டு இந்திய படை வாபஸ் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது. ஒப்பந்த நாயகன் ராஜீவ் அரசே 1989 மார்கழியில் வாபஸ் வாங்குவதாக அறிவித்தார். இந்தியாவின் பாராளுமன்ற அரசியலில் ஏற்பட்ட மாற்றமானது இந்தியரசின் பிராந்திய விரிவாதிக்க கொள்கையில் மாற்றம் கொண்டுள்ளது என முதலாளித்துவ செய்திதாள்களும் பாராளுமன்ற கதிரை மாற்றம் அடிப்படை மாற்றம் என நினைப்பவர்களும் கூறும் செய்தி சுத்தப் பொய் என்பதை, "இந்தியரசின் பழைய அயலுறவுக் கொள்கைகளில்

www.tamilarangam.net



எந்த மாற்றமும் இல்லை. ஆனால் அணுகுமுறையில் மாற்றம் தேவை என உரைப்பட்டு பின்பற்றப்படுவதாக" இந்திய தரகு முதலாளி வர்க்க அரசின் புதிய தலைவன் வி.பி.சிங்கே அறிவித்துள்ளதை கவனிக்க வேண்டும். இன்று சர்வதேச அளவில் ஏகாதிபத்தியங்கள் கூட உலகை பங்கிட்டுக்கொள்ளும் கொள்கையில் நேரடி இராணுவ ஆக்கிரமிப்பை கடைசி ஆயுதமாகவே பயன்படுத்துகின்றன. பல நாடுகளில் தமது ஆக்கிரமிப்பு படைகளையும், இராணுவ தளங்களையும் வாபஸ் பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அந்தளவுக்கு மக்களின் எதிர்ப்பு போராட்டங்கள் முன்னேறியுள்ளது. அந்திய விரிவாதிக்க வாதிகள் இலங்கை விவகாரத்தில் இருந்து நல்ல பாடத்தை கற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதுதான் உண்மை.

வி.பி.சிங் அரசு ஏற்படுத்திய அணுகுமுறை மாற்றம் ஐ.பி.கே.எஃப்.-குப் எல்.டி.டி.ஈ.-க்கும் இடையிலான யுத்தத்தை நிபந்தனையற்ற முறையில் நிறுத்தியதும் 1990 பங்குனி மாதத்திற்குள் முழுப்படைகளையும் வாபஸ் வாங்கியக் கொள்வதும்-தான் இந்த மாற்றங்கள் இன்று தமிழீழ பகுதிகளில் பல மாற்றங்களை உண்டு பண்ணியுள்ளது. இந்திய ஆக்கிரமிப்பு படை முழுவதும் பின்வாங்குவது என்ற விஷயத்தில் எந்த புரட்சிகரமான தேசபக்தனுக்கும் இரண்டு கொள்கை, கருத்து இருக்க முடியாது. இந்தியப்படைகள் வாபஸ் பெறப்படுகின்ற பிரதேசங்களில் இந்திய இராணுவத்தை சார்ந்து இருந்து கட்டப்பட்ட "தமிழ் தேசிய தொண்டர் படை" எல்.டி.டி.ஈ.யினால் அழிக்கப்பட்டு அப்பிரதேசங்கள் எல்.டி.டி.ஈ.யின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றது. இயக்கங்களுக்கிடையிலான மோதல்கள் அழித்தொழிப்புகள் அவரவர்கள் பாணியில் உக்கிரமடைந்துள்ளது. அன்று இந்தியப்-படைகளுடன் நின்று இ.பி.ஆர்.எல்.எஃப். தலைமையிலான இயக்கங்கள் செய்த அராஜக படுகொலைகளும் சரி இன்று எல்.டி.டி.ஈ. தனது சொந்த இராணுவ பலத்தையும் இலங்கை அரசின் அனுசரனையுடன் செய்யும் இராஜக படுகொலைகளும் எந்த விதத்திலும் அரசியல் ரீதியாக சீர்தூக்கி பார்க்கக்கூடியவை அல்ல. காரணம் தமது இயக்க மேலாண்மைக்காகவும், யதேச்சதிகாரத்துக்காகவும் தான் கண்மூடித்தனமாக அழித்தொழிப்பில் ஈடுபடுகிறார்களேத் தவிர மக்களின் விடுதலை வென்றெடுப்பதற்கான அரசியல் வழி, இராணுவ நடவடிக்கைகள் என்பதை-யெல்லாம் இன்று வெறும் வாய்பிதற்றல்களாகத்தான், வாய்பாடுகளாகத்தான் பின்பற்றுகிறார்கள். இந்திய ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக தனது வர்க்க

www.tamilarangam.net



நலனில் இருந்து வழங்கிய ஒரு நல்ல அம்சத்தை கொண்டே தன்னிடம் உள்ள மற்றைய எல்லா தவறுகளையும், தனது தனி இயக்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டவும் "இந்தியரசிடம் இராணுவப் பயிற்சி பெற்ற அனைவரும் தேசவிரோதிகள்" என முத்திரையிட்டு அழிக்கப்படுகின்றனர். முன்னையவர்கள் அன்னியப்படைகளைச் சார்ந்து நின்று தமது இயக்க மேலாண்மையை அதிகாரத்தை நிறுவ முற்பட்டனர். பின்னையவர்கள் தமது இயக்க இராணுவத்தைக்கொண்டு தமது இயக்க மேலாண்மைமைய அதிகாரத்தை நிறுவுகின்றனர். இந்தியரசை சார்ந்து நின்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமையிலான இயக்கங்களால் தமது சொந்த பலத்தைக்கொண்டு எல்.டி.டி.ஈ. உடன் தாக்குப்பிடிக்க முடியாத நிலைமையில் அவர்களை கைவிட்டு விடமுடியாத அவலமும் எல்.டி.டி.ஈ முற்று முழுதாக அழிக்கவும் முடியாது என்ற நிலையில் இந்தியப்படைகள் வாபஸ் வாங்கும் முன்னாலேயே அவர்களின் முழு மும்மரமான முயற்சியால் கட்டப்பட்ட மாகாண அரசும், தமிழ் தேசிய படையும் நிலைகுலைக்கப்பட்டு எல்.டி.டி.ஈ. முழு அதிகாரத்தையும் எடுத்துவிடும் நிலைக்கு முன்னதாக இந்தியரசு தமிழ்நாடு முதல்வர்மூலம் அவரது அழகு தமிழில் "சகோதர யுத்தத்தை" நிறுத்த வேண்டும் என கோரி எல்லா இயக்கங்களையும் அழைத்து பேசியுள்ளார். இங்கு நாம் கவனிக்க வேண்டியது இயக்கங்களுக்கு இடையிலான மோதல் என்பது இன்று நேற்று தோன்றியதல்ல. சிங்கள பேரினவாத பலாத்கார அடக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியில் இருந்து பலாத்கார போராட்ட அணிகள் உருவாகியதில் இருந்து அன்று குழு மோதல்களாக வெளிப்பட்டது. இன்று இயக்க மோதல்களாக வளர்ந்துள்ளது. சிறு முதலாளி வர்க்க தன்மை கொண்ட இயக்கங்களின் கருவில் இருந்தே அதனது சிந்தனை போக்குபடி தனது குழுவை எல்லாவற்றுக்கும் மேலாக நினைப்பது. தாங்கள் மட்டுமே மக்களின் ஒரே பிரதிநிதிகள் என தாங்களே முடிவு செய்து கொள்வது, முரண்பட்ட கருத்துக் கொண்டவர்களை அழிப்பது தனி நபர் பயங்கரவாத கொள்கைகளில் சுத்த நம்பிக்கை கொள்வது, இராணுவ பலத்தைக்கொண்டு மாற்று அணிகளை அழித்துவிட்டுதான் நினைக்கும் அரசியல் காரணங்களை முன் வைப்பது, உரிமை கோராத மரணதண்டனைகளை விதிப்பதும், பின்னர் அரசியல் இலாபம் என கருதும் போது உரிமை கோருவதும் இந்த சிறுமுதலாளிய இயக்கங்களின் ஒருவித பண்பாடு – இது இலங்கையில் மட்டுமல்ல. சிறு முதலாளிய இயக்கங்களின் ஆதிக்க போக்குகளுடன் தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்பு பெற்றுள்ள நாடுகளில் காணப்படும் ஒரு வெளிப்பாடாகும். இவ்–

www.tamilarangam.net



இயக்கங்களின் இது போன்ற செயற்பாடுகள் எதிரிகளுக்கு சாதகமாக அமைந்து-விடுகின்றன. போராட்டகளத்தில் இருந்து ஒரு உதிரிகூட்டத்தை தோற்றுவிக்கின்றது. குறிப்பிட்ட காலங்களில் இயக்கங்கள் சிதைவடைந்து மக்களின் வெறுப்புக்குள்ளாகின்றது. இயக்க தலைமைகள் பல துண்டுகளாக சிதறி பல விதேசிநாடுகளின் கைக்கருவிகளாக மாறுகின்றது.. மொத்ததத்தில் இவ்விளைவுகள் போராட்டத்தில் ஒரு தேக்க நிலையை தோற்றுவித்து எதிரியை பலப்படுத்துகின்றன. இறுதியில் இத்தலைமைகள் நம்மது கைக்கு கிடைக்கின்ற அதிகாரத்தை பெற்றுக்கொண்டு ஒரு அரசத்தை எதிரியுடன் ஏற்படுத்திக்கொள்கின்றது. இவையாவும் தமிழீழ பகுதிகளில் உள்ள சிறு முதலாளித்துவ இயக்கங்களுக்கு பொருந்துகின்றன. பொருந்தக்கூடியவையாகும்.

தமிழக முதல்வரின் அழைப்புக்களில் எல்.டி.டி.ஈ. மாகாண அரசை கலைப்பது, தேர்தல் நடத்துவது என்ற கோரிக்கைகளை முதன்மைப்படுத்தியுள்ளது. எல்.டி.டி.ஈ.-யின் கோரிக்கைகளை ஈ.ஆர்.ஓ.எஸ். மனப்பூர்வமாக ஏற்றுக்-கொண்டுள்ளது. டெலோ, ப்ளாட் என்பன மனப்பூர்வமாகவோ அல்லது கலைஞர் கேட்கிறார் என்பதற்காகவோ ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் மாகாண அரசின் ஆதிக்கம் உள்ள இ.பி.ஆர்.எல்.எஃப்-ம் அதனதும், இந்திய அரசினதும் நம்பிக்கைக்-குரிய இராணுவ குண்டாஸ் ஆன இ.என்.டி.எல்.எஃப்-ம் தங்கள் தூக்கியெறியப்-படப்போவதை உணர்ந்து நீண்ட நாள் அவகாசத்தின் பின் 19 அம்சக் கோரிக்கை-களை உள்ளடக்கிய ஒரு அரசியல் விளையாட்டு அறிக்கையை ஈ.பி.ஆர்.எல்.எஃப். முன் வைத்துள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்ன முடிவு எடுக்கின்றதோ, அதுவே தனது முடிவு என ஈ.என்.டி.எல்.எஃப். கூட்டம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு முதல்வர் அவரது வார்த்தையில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளது எனக்கூறி-யுள்ள போதிலும் தோல்வியை ஏற்படுத்தியுள்ளதே உண்மை.

இ.பி.ஆர்.எல்.எஃப். தனது அரசியல் சாணக்கியத்தின் உச்ச நடவடிக்-கையாக, ஏதாவது திகைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற தமிழக அரசியல் பாணியில் வடகிழக்கு மாகாண அரசை "ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய நாடாளுமன்றமாக" அறிவித்து ஒரு வருடகாலக் கெடுவில் தமது 19 அம்சக் கோரிக்கைகளை பரிசீலிக்கு-மாறு இலங்கை அரசை கேட்டுள்ளார்கள். இந்த 19 அம்ச நாடகம் என்பது எல்.டி.டி.இ.-யின் கோரிக்கைகளைவிட தமது கோரிக்கைகள்தான் தமிழீழ தாகம் கொண்டதல்ல என அம்பலப்படுத்தி துரோகிகள் என முத்திரை குத்தப்-போவதாகவும் பெருமாள் அறிவித்திருப்பது ஒரு கோரிக்கை வித்தை விளையாட்டேதான்

www.tamilarangam.net



"பெருமாள் இலங்கையைவிட்டு வெளியேற முன்னர் பரபரப்பாக இதைச் செய்துள்ளதாக பாரும் கருதுகின்றனர்" தமிழர் கட்சிகளாலோ இலங்கை அரசாலோ தங்களுக்கு ஆபத்து நேரிடும் என கருதும் தமிழர்கள் முஸ்லீம்கள் இந்தியாவில் தஞ்சம் பெற உரிமை அளிக்கவேண்டும்" என தமிழக முதல்வரிடம் வைத்த கோரிக்கையின் உட்பொருள் வேறு என்னவாக இருக்க முடியும். இந்திய அரசு பெருமாளின் ஈழ திட்டத்தை ஆதரிக்க முடியாது எனக் கூறியுள்ள போதும் பெருமாள் "இந்தியரசுக்கு எங்களைவிட்டால் வேறு வழியில்லை" எனக் கூறியிருப்பதும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் "தமிழீழ மக்களுக்கு என்ன தேவை என்பதை அவர்கள் தீர்மானிப்பார்கள். இந்தியரசு தனது தார்மீக ஆதரவை தரவேண்டும். அரசியல் ரீதியாகவோ இராணுவ ரீதியாகவே ஆதிக்கம் செலுத்துவதை தாங்கள் விரும்பவில்லை" என கூறியிருப்பதில் இருந்தும் இந்திய விரிவாதிக்கவாதிகளுக்கு கொள்கை ரீதியாகவே நம்பிக்கைக்குரிய சக்தி பெருமாள் கூட்டத்தான் என்பது தெளிவாகும். ஆகவே, பெருமாள் கூட்டத்தை இந்தியரசு முற்றுமுழுதாக கைவிட்டுவிட மாட்டாது என்பதை நாம் கண்டு கொள்ளமுடியும்.

இந்தியப்படைகள் முழுவதுமாக வாபஸ் வாங்கும் வரை மாகாண சபைகளை கலைக்கும். தன் அதிகாரத்தை பிரேமதாசா பயன்படுத்தமாட்டார். அதேவேளை எல்.டி.டி.ஈ.யுடனான உறவின் நம்பகத்தன்மையை பொறுத்து பின்னர் மாகாண சபையை கலைத்து ஒரு தேர்தலை நடத்த முற்படலாம். ஈபிஆர்எல்எஃப் மற்றைய இக்கங்களும் இலங்கை அரசுக்கு எதிராக தொடர்ந்தும் போராடுகின்ற முடிவை எடுக்குமானல் அதன் விளைவுகளையும் தமிழீழ அரசியல் நிலவரங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் பொறுத்தே பார்க்க வேண்டியுள்ளது. இந்தியப்படைகள் முழுக்க வாபஸ் பெறுவது பற்றிய பிரச்சனையில் இந்தியரசு இருபது ஆண்டு கால நட்புறவு ஒப்பந்தம் ஒன்றை மீண்டும் கைச்சாத்திட முயல்கின்றது. அந்த ஒப்பந்த சரத்துக்கள் மிக அப்பட்டமாகவே இந்தியா தனது கட்டுப்பாட்டை விரிவாதிக்க நோக்கங்களை ஈடுசெய்யும் அம்சங்கள் இருப்பதுதெளிவாக கண்டு-கொள்ள முடியும். இலங்கை அரசு இந்தியப்படை முழுக்க வாபஸ் ஆனபின் இது-பற்றி யோசிக்கலாம் என சொல்லிக் கொள்கின்றது. 1989 ஒப்பந்தமும் அதன்-பின் நடந்த எழுச்சிகளும் இந்திய எதிர்ப்பு என்பதை பிரதான உள்ளடக்கமாக கொண்டிருந்தது. எனது உள்நாட்டில் மக்களின் பேராட்டங்களை தானகவே தூண்டும் முயற்சியை பிரேமதாசா ஒப்பந்த விஷயத்தில் செய்யமாட்டார். அதேபோல் உள்நாட்டு நெருக்கடிகள் தனது அரசை நிலை குலைய வைக்கும்

www.tamilarangam.net



அளவுக்கு செல்லும்போது இந்தியாவுடன் அவரால் ஒரு ஒப்பந்தத்தை செய்யாமலும் இருக்க முடியாது. ஆகவே, இந்தியா தனது அணுகுமுறையில் எந்த வழியை கைக்கொள்ளப் போகின்றது. தொடர்ந்தும் என்ற கேள்விக்கான பதிலும் தமிழீழ அரசியல் நிலவரங்களில் தாக்கத்தை செலுத்தும், இதையும் சற்று பொறுத்தே பார்க்க வேண்டியுள்ளது.

தமிழீழ பகுதிகளில் எல்.டி.டி.ஈ.-யின் ஆதிக்கம் கைபோக்கினும் அதுவே சாத்தியமானதாக இருக்கும் அல்லது ஈ.பி.ஆர்.எல்.எஃப். மாற்று இயக்கங்களின் கைபோக்கினும் இவ்வியக்கங்களுக்கிடையிலான மோதல் என்றும் ஒரு தொடர் நிகழ்ச்சியாகவே இருக்கும். இம்மோதல்களின் அடிப்படை நோக்கம் என்பது யார் அல்லது எந்த இயக்கம் இதுவரை கால போராட்டத்தின் பலனை அனுபவிப்பது. ஆட்சி அதிகாரத்துக்கு வருவது. இதில் யார் அதிகாரத்துக்கு வந்தாலும் சிங்கள பேரினவாதத்தின் அடிப்படையை இன ஒடுக்குமுறையின் வேரை கிள்ளியெறிய முடியாது. மாகாண அரசும் (வடக்கும் கிழக்கும் இணைவது பற்றிய வாக்கு எடுப்பு நடத்தப்படவில்லை) அதில் பங்கு பெற்றுக்கொண்டு அரசியல் ரீதியாக நடத்தப்போகும் போராட்டங்களும், சிங்கள பேரினவாதத்தின் தேசியளவிலான இன ஒடுக்குமுறையின் வடிவங்களில், அளவுகளில் சில மாற்றங்களை கொண்டு வரலாம். அதேபோல் இரண்டு பகுதிகளிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் உள்ள இந்த கட்சிகள் மக்களின் இனமொழி உணர்வுகளை தமது பிற்போக்கு அதிகார ஆட்சி நிலைநிறுத்தலுக்காக நன்றாக பயன்படுத்தவே செய்வர். இதன் நீண்ட விளைவு இனக்கலவரங்களை மீண்டும் வளர்க்கச் செய்யலாம். மொத்தத்தில் இது-வரை கால தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் அடித்தட்டு வர்க்கமான தொழிலாள, விவசாய, மீனவ பெரும்பான்மை மக்கள் போரில் ஆற்றிய பங்கும் சிந்திய ரத்தமும் தமிழ் உயர்வர்க்கங்களின் அரசியல் ஆட்சி அதிகாரத்துக்கும் உழைக்கும் மக்கள் மீதான தொடர்ச்சியான சுரண்டல் கொள்கையையுமே சாதிக்க பயன்படப்போகின்றது. வரலாற்றில் ஆளப்படுகின்ற வர்க்கத்தின் ரத்தத்தையும் தியாகத்தையும் பயன்படுத்தியே முதலாளிவர்க்கம் தன்னை சக்திப்படுத்திக்கொள்-கின்றது என்பது இங்கும் நிரூபணமாகின்றது.

தமிழீழ மக்கள் மீதான சிங்கள பேரினவாத அடக்குமுறைக்கும் இன அழிப்புக்கும் முழுமையான தீர்வு என்பது இலங்கை சிங்கள பேரினவாத தரகுமுதலாளிய

www.tamilarangam.net



அரசை முற்றுமுழுதாக தூக்கியெறிவதன்மூலமே சாத்தியம். அத்தகைய தேசீய இன அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தூடாக தமிழீழ உழைக்கும் தொழிலாள விவசாய, மீனவ மற்றும் அடக்கப்படுகின்ற வர்க்கங்களின் விடுதலையும், பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி அதிகாரம் நிறுவப்படுவதும் இலங்கை முதலாளித்துவத்தை தூக்கி-யெறிந்து புதிய ஜனநாயகக் குடியரசை நிறுவுவதால் மட்டுமே முடியும். இவற்றை-யெல்லாம் சமூக நடைமுறையாக்கக் கூடியசக்தி ஒரு புரட்சிகர மார்க்சிய-லெனினிய கட்சிக்கு மட்டுமே உண்டு. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டதூடாக வளர்ந்துவரும் மார்க்சிய-லெனினிய சக்திகள் சக்திகள் இதை உணர்ந்து செயற்-படவேண்டும்.

இலங்கை அரசுக்கு (சிறிமா தலைமையிலான எஸ்.எல்.எஃப்.பி.தான் அன்றைய ஆளுங்கட்சி) எதிராக 1971ன் சிங்கள மக்களின் பெரும் எழுச்சியையும் கடுமையான இழப்புக்களுடன் கூடிய போராட்டத்தையும் அரசு தனது அரசியந்-திரங்களைக்கொண்டு அடக்க முற்பட்டபோதும், ஜே.என்.பி. தலைமையில் நடந்த திடீர் இராணுவ நடவடிக்கைகளை முகங்கொடுக்க முடியாமல் இந்திரா தலைமையிலான இந்தியரசின் படைகளை வரவழைத்துதெற்கின் ஆறுகள், ஏரிகள், குளங்களில் இரத்த வெள்ளத்தை பாயவிட்டதன்மூலம் அடக்கியது. அதன் பின் 1987 வரை புகைந்து கொண்டிருந்த சிங்கள மக்களின் போராட்ட உணர்வுகள் மீண்டும் ஜே.வி.பி. தலைமையில் பற்றி யெரியத் தொடங்கியது. 71ல் இந்திய இராணுவத்தின் கொடுங்கரங்களால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் என்பதாலும் இந்தியாவை பற்றி வரலாற்று ரீதியாக சிங்கள மக்கள் கொண்டிருக்கும் அச்சமும் இணைந்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்ப்பில் இருந்து இந்திய பொருள்களை பகிர்த்-தளிப்பது வரை போராட்டம் தீவிரமடைந்தது. தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் மாணவர் போராட்டங்கள் --- என வெகுஜன போராட்டங்கள் எல்லாம் அரசின் சிவில் நிர்வாகத்தை கதிகலங்க வைத்தது. ஜே.பி.வி.-யின் சரியானதும், சரி-யற்றதுமான இராணுவ நடவடிக்கைகள் அரசை பயபீதிக்குள்ளாக்கியது. மறுபுறம் இந்த இராணுவ நடவடிக்கைகள் அரசு இயந்திரத்தில் இருந்த அனைவரையுமே ஜே.வி.பி.-க்கு எதிராக கொண்டு வந்து நிறுத்தியது. ஜே.வி.பி.-ன் தவறான கொள்கைகளும் அணுகுமுறைகளையும் அரசு மக்கள் மத்தியில் நன்றாக பயன்படுத்தியது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்படும் வரை தமிழீழ போராளிகளை எதிர் கொள்வதே அரசின் முப்படைகளது பிரதான இலக்காகவும், வேலையாகவும் இருந்தது.

www.tamilarangam.net



ஒப்பந்தத்தின்மூலம் அந்த வேலையை இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கைகளுக்கு மாற்றப்பட்டதால் (ஓநாய் ராஜதந்திரி ஜே.ஆர்.-ன் சம்மதப்படி - அண்மைக் காலங்களில் நரியைவிட ஓநாய் தந்திரமிக்கது என கூறப்படுகிறது) சிங்கள மக்களின் போராட்டங்களை அரசு தனது முப்படைகளைக் கொண்டும், சதிப்படைகளைக் கொண்டும் நசுக்க முழுப்பலத்தையும் பிரயோகித்தது. புதிய நரி பிரேமதாசா சிங்கள மக்களிடம் பரந்தளவில் காணப்பட்ட இந்திய எதிர்-புணர்வுகளையும் போராட்டங்களையும் கண்டு தானும் இந்திய படைகளை எதிர்ப்ப-தாக காட்டிக்கொண்டது. தனது கெட்டிக்கார அரசியலைக் கொண்டு வடக்கு தெற்கு என வேறுபாடு இன்றி அமைதிகாண முதலாளித்துவ தேசிய நீரோட்டத்தில் கலக்க அழைப்புவிட்டதில் ஐ.பி.கே.எஃப்.-உடன் யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டே இந்திய எதிர்ப்பு எல்.எல்.எம்.பி. அரசிடம் இருப்பதாக கூறி பிரேமதாசா அரசுடன் அமைதிக்கான பேச்சில் எல்.டி.டி.ஈ. இறங்கியது. ஆனால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் இராணுவ ஆக்கிரமிப்பையும் எதிர்த்து போராடிக்-கொண்டும் (பேச்சில் அல்ல), அதே நேரத்தில் எல்.எல்.எம்.பி. அரசையும் எதிர்த்து போராடும் சிங்கள மக்களின் போராட்டத்துடன், போராட்ட சக்தி-களுடன் தன்னை இணைத்துக்கொள்ளாது ஆதரவு வழங்காது, இலங்கை மக்களின் எதிரி, தமிழ் தேசிய இனத்தின் மீதான ஒடுக்குமுறையாளன் நரிதந்திரி பிரேமதாசா அரசுடன் எல்.டி.டி.ஈ. பேசியது. இதுவே எல்.டி.டி.ஈ.-ன் வரலாற்றில் மாபெரும் ராஜதந்திரமாக பேசப்படுகின்றது. ஒப்பந்தத்தின் பின்னர் எல்.டி.டி.ஈ. தவிர்ந்த ஏனைய நான்கு இயக்கங்களும் இந்தியரசின் கைகளுக்குள் கட்டுப்பட்டு இருந்தனர். எல்.டி.டி.ஈ. பிரேமதாசா அரசுடன் பேசிக்கொண்டு இருந்தது. இவர்கள் எல்லாம் சிங்கள மக்களின் அடிப்படை உரிமைகளுக்கான போராட்டத்தை ஆதரிப்பதற்கு பொது எதிரிக்கு எதிராக இணைந்து போராடுவதற்கு பதில் மக்களின் எதிரிகளுடன் இணைந்து இருந்தனர். ஆதரித்துக்கொண்டு இருந்தனர். அவர்களின் சிறு முதலாளிய குறுகிய நலன்கள் அவர்களை அதற்கு மேல் சிந்திக்க, செயற்பட அனுமதிக்க போவதில்லை என்பது உண்மைதான். சிங்கள மக்களைப்பற்றி அறிக்கைகளிலும், மேடைகளிலும் முழங்கும் இவர்களது இரட்டை வேடம் அம்பலப்-பட்டு போனதே அது போதும். மக்கள் அவர்களை இனங்கண்டு கொள்ளலாம்.

ஜே.வி.பி.-ன் சந்தர்ப்பவாத மார்க்சிய அரசியலும், அதன் நெறிப்-படுத்தப்படாத, அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்ளாத போராட்டங்களும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராணுவ நடவடிக்கைகளும், கோரிக்கைகள், எச்சரிக்கைகள் எல்லாமும், சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இயக்கங்களுக்கு இடையிலான மோதல்கள், அழித்தொழிப்புக்கள் எல்லாவற்றையும், பிரேமதாசா அரசு தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது. இந்தியப்படைகள் பின்வாங்க வேண்டும் என்ற கோசத்தின் பின் ஒழிந்து கொண்டு சிங்கள மக்களின் மேல் தமது காட்டுமிராண்டித்தனமான கொலை வெறியை நடத்தியது. ஜே.வி.பி.-ன் அடித்தள வழிகாட்டிகளை படுகொலை செய்யும்வரை இந்தியப்படைகளின் இருப்பையும் மனப்பூர்வமாக கள்ளத்தனமாக ஆதரித்துக்கொண்டு இருந்தது. பிரேமதாசா அரசு மீண்டும் சிங்கள மக்களின் போராட்டம் புகையத் தொடங்கியுள்ளது. ஆனால் 71ஐவிட வேகமாக தீப்பற்றக்கூடிய புகையாகவே இருக்கும். சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் புரட்சிகர மார்க்சிய லெனினிய சக்திகள் தமது தவறுகளையும், அனுபவங்களையும் கிரகித்துக்கொண்டு செயற்படுவதன் மூலந்தான் சிங்கள மக்களின் போராட்டத்தை இறுதி வெற்றியை நோக்கிக்கொண்டு செல்ல முடியும்.

இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பு என எல்லாராலும் வர்ணிக்கப்படும் மலைய மக்களின் போராட்டத்தை பொறுத்தவரை, இலங்கை இடதுசாரிக்கட்சிகள் இனவாத அரசியலுடன் இணைந்து கொண்டு பாராளுமன்ற சாக்கடையினுள் நுழையும்வரை அவர்களின் தலைமை வழிகாட்டலில் முனைப்பு பெற்ற போராட்டங்களை நடத்தியது. திரிபுவாத பாதையில் உறுதியாக இடதுசாரிக்கட்சிகள் தம்மை நிலைப்படுத்தியபின் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகவே தொழிலாளர்களை அணி திரட்டி முதலாளி வர்க்கத்துடன் சமரசம் பேசி சில எலும்புத்துண்டுகளை பெறுவதுடன் தம்மை நிறுத்திக்கொள்ளும் இக்கட்சிகள் மலைய மக்களின் அடிப்படை அரசியல் அதிகாரத்திற்கான போராட்டத்துக்கு தடைக்கல்லாகவே உள்ளது. இலங்கை தரகு முதலாளி வர்க்கத்தின் ஒரு நெம்புகோல் தொண்டமானும் அவரது கட்சியும் தொழிற்சங்கமுமே மலையகத்தில் கொடிகட்டி பறக்கின்றது. முதலாளித்துவ அரசியலுக்காக நிற்கும் இந்த தொழிற்சங்கம் மக்களின் அறியாமையை பயன்படுத்தி இலங்கை அரசுக்கு எதிராக தமது எந்த உரிமைகளுக்கும் போராட முடியாதவாறு கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது. மறுபுறம் சிங்கள பேரினவாதத்தின் தமிழ் இன அடக்குமுறைக்கு எதிராக உருவெடுத்த தேசிய விடுதலை இயக்கங்களுள் சில மலைய மக்களை பற்றி பேசுவது கூட இல்லை. ஏனெனில் அவர்களது அடிப்படை கோரிக்கைகளில் வடக்கு கிழக்கு மக்கள் முழுவரின் நலன்கள்கூட உள்ளடங்குவதில்லை. இங்குள்ள

www.tamilarangam.net



மேல் தட்டு வர்க்கங்களையும், மேல் சாதியினரையும் மட்டுமே உண்மையில் பிரதி- நிதித்துவப்படுத்துபவர்களாக இருக்கின்றனர். வேறு சில இயக்கங்கள் தமிழீழ எல்லைக்கோடுகளை பெரிதாக போடுவதற்குத் தமது சந்தர்ப்பவாத சிறு முதலாளிய மார்க்சியத்துக்கு ஆதரவு தேடும்வகையில் மலைய மக்களை பற்றியும் அவர்களது பிரச்சனைகளையும் பேசிக் கொள்கின்றனர். மலைய மக்களின் மத்தியில் இருந்தும் சில பாராளுமன்ற சீட்டுக்களை தம்து இயக்கம் பெற்றுக் கொள்ளக்கூடியவகையில் மலைய மக்களின் போராட்ட உணர்வுகளுடன் தமது ஒரு பக்கத்தையும், வர்க்க விரோதியான தொண்டமானுடனும் அவரது கட்சியுடன் ஒரு முகத்தை வைத்தும் சமரசம் பண்ணும் சிவப்புண்ணிகளும், மொத்தத்தில் இந்திய அரசின், குறிப்பாக தமிழ்நாட்டு மக்களின் முன் மலைய மக்களைப்பற்றி பேசுவதும், சில கோரிக்கைகளை முன் வைப்பதும் அவர்களது அபிமானத்தை ஆதரவை பெற ஒரு கருவியாகவே இந்த சிறு முதலாளிய இயக்கங்கள் மலைய மக்களை பயன்படுத்துகின்றன.

அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். முன் வைத்த 19 அம்ச கோரிக்கை- களுள் மலைய மக்களுக்கு தனி மாகாணம், தனி மாநிலம் என்ற வெற்று வாக்கியங்- களும், கோஷங்கும் அம்மக்களின் அரசியல் பொருளாதார வாழ்நிலையில் இருந்து போராட்ட நடைமுறைகளூடாக முன் வைக்கப்படும் ஒரு கோரிக்கை அல்ல தமது அரசியல் சதுரங்க வித்தை விளையாட்டுக்கு ஒரு காயாகவே பாவிக்கப்படுகின்றது. மலைய மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக எந்த சமரசமும் இன்றி போராடும் புரட்சிகர சக்திகளை 'சிவப்பு உண்ணி' ஆயுதவீரர்கள் அழிக்க தயாராகின்றனர் என்பதற்கான அடையாள படுகொலைதான் தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவையின் முன்னணி தோழர் நெப்போலியனின் உயிர்பலி வாங்கப்பட்டது. சில புரட்சியாளர்- களை அழிப்பதன்மூலம் புரட்சியை தடுத்துவிட முடியும் என இந்த கருங்காலிகள் கனவு காண்கின்றனர்.

மலைய மக்கள் மீதான அடிப்படை வர்க்க அடக்கு முறையையும், அவர்கள் மீதான இன ஒடுக்கு முறையையும் சரியாக புரிந்து கொண்டு வாழ்வுக்கும்விடிவுக்குமான போராட்டத்தில் அவர்களை தட்டியெழுப்பி அணி திரட்டி போராடக்கூடிய வர்க்க இணைவு ஒரு புரட்சி பாட்டாளி வர்க்கத்துக்கு மட்டுமேயுண்டு. உழைக்கும் மக்களின் சமூக பொருளாதார விடுதலைக்கும் அரசியல் அதிகாரத்துக்கும் போரிடும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு மார்க்சிய லெனினிய கட்சியே மலைய மக்களின் கனவுகளை போராட்டத்தின்-மூலம் நனவாக்கக்கூடிய சக்தி பெற்றது. அதுவரையில் தொழிலாளர்களை காட்டி முதலாளிகளாகும் கட்சிகளும் இயக்கங்களுமே அவர்களை பயன்படுத்துவர். மலைய மக்களின் உரிமைகளுக்காக போராடும் புரட்சிகர சக்திகள் மார்க்சிய லெனினிய கட்சியின் அவசியத்தை உணர்ந்து செயற்படதொடங்கியுள்ளது நம்பிக்கை தரக்கூடியதாகும்

இலங்கை ஆளும்வர்க்க தரகு முதலாளித்துவ அதிகார வர்க்க அரசானது, (இன்று பிரேமதாசா தலைமையில் செயல்படுகிறது) உள்நாட்டில் மூன்று விதமான புரட்சிகர ஆயுதங்களால் தாக்கப்பட்டுக்கொண்டே வருகின்றது. சிங்கள மக்களின் போராட்டம், மலைய மக்களின் போராட்டம், தமிழீழ தேசிய இனத்தினதும், சிறுபான்மை இனங்களதும் இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம். இம்-மூன்று முனைகளில் இருந்து எழுகின்ற போராட்டங்களையும் ஆளும் வர்க்க அரசானது தனக்கு எதிராக ஒன்றுகுவியவிடாது பார்ப்பதிலும்: அவற்றைத் தனித்தனியே எதிர் கொண்டு தாக்கி அடக்குவதிலும் தொடர்ந்து வெற்றி பெற்றுக்கொண்டே வருகின்றது. இலங்கை அரசின் இத்தகைய வெற்றிக்கு ஒவ்வொரு முனைகளிலும் உள்ள குறுகிய எண்ணங்கொண்ட உழைக்கும் மக்களின் விரோதிகளான அயநலவாத சக்திகளின் ஆதரவை, துரோகத்தனங்களை அரசு பயன்படுத்திக்கொள்கின்றது.

மூன்று முனைகளில் உள்ள மக்களின் இலங்கை ஆளும் வர்க்க இனவாத அரசுக்கு எதிரான போராட்டங்களும், இலங்கை உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்துக்கு ஆன போராட்டங்களும், மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனை வழியில் இயங்கும் ஒரு புரட்சிகர மார்க்சிய லெனினிய கட்சியின் தலைமை வழி-காட்டலில் முன்னெடுக்கப்படுவதன் வாயிலாகவே சரியான திசை வழியை நோக்கி செல்லமுடியும். இன மொழி, மத, சாதி, பிரதேச வேறுபாடற்ற ஒரு சுதந்திர-மான, அமைதியான சமூக வாழ்க்கை என்பது இலங்கை ஆளும் வர்க்கஇனவாத அரசை ஒரு புரட்சியின் மூலம் தூக்கியெறிந்து பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நிறுவப்-படும் புதிய ஜனநாயக குடியரசில்தான் அது சமூக நடைமுறையாக இருக்கும்.

ஒவ்வொரு முனைகளிலும் இருந்தும் மக்களின் சுதந்திரத்துக்காக போராடு-கின்ற புரட்சிகர சக்திகள் இலங்கை பிற்போக்கு ஆளும் வர்க்கத்தை அரசை வெற்றி-கொள்ள, இலங்கை மக்களின் விடுதலையை வென்றெடுக்க ஒன்றுபட்ட இலங்கைக்கான

www.tamilarangam.net



மார்க்சி ! லெனினிய கட்சியை கட்டுப் 'ணியினை நோக்கி முன்னேற வேண்டும். இலங்கை ஆளும் வர்க்க இனவாத அரசுக்கு எதிராக எந்தளவுக்கு இடைவிடாத போராட்டங்களை மூன்று முனைகளிலும் உள்ள புரட்சியாளர்கள் தொடுக்கிறார்களோ, அதேயளவு தத்தம் முனைகளிலுள்ள குறுகிய எண்ணங்கொண்ட பிற்போக்கு சக்திகளையும் எதிர்த்துப் போராடியாக வேண்டும்.

போராட்டம் இன்றி வாழ்வு இல்லை!

– செங்கனல் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

ஃ சிரத்தையுடன்படி சராம்சத்தை புரிந்து கொள்; விடலங்களைப் பற்றி மேலேழுந்த வாரியாக தெரிந்து கொள்வதை விட ஏதாவதொரு விடயத்தில் முழுக் கவனத்தையும் முனைப்பாக செலுத்து.

ஃ கடுமையாக உழை, திட்டமிடு, கவனத்தை ஒருமுகப்படுத்தி, ஒரு வழி முறையை தேர்ந்து கொள்.

ஃ வேலையுடன் படிப்பையும் இணை, காலம், நிலமைகளுக்கு ஏற்றபடி அவற்றிடையே நிலவும்படி செய்த வேலையை பரிசீலனை செய்யவும், அனுபவத்தை முறைப்படுத்தவும் தவறாதே. புதியன கண்டுபிடி; புதியன படை.

ஃ கொள்கை அடிப்படையில் மற்றவர்களிடத்திலும் தன்னிடத்திலுமுள்ள தவறான சித்தாந்தங்களை உறுதியாக எதிர்த்து போராடு.

ஃ முடிந்த மட்டும் ஆற்றல்களை முழுமையாக பயபடுத்து. பலவீனங்களில் இறந்துவிடுபட திட்டவட்டமாக செயற்படு.

ஃ மக்களிடம் இருந்து அன்னியப்பட்டு கொல்லாதே. அவர்களுக்கு கற்றுக் கொள். அவர்களுக்கு உதவு, கூட்டுவாழ்க்கை வாழவும், உன்னைச் சுற்றிலும் உள்ள மக்களின் கவலைகளை விசாரித்து அவர்களுடைய பிரச்சனைகளை ஆராயக், கட்டுப்பாட்டு விதிகளுக்கு கீழ்படி.

ஃ உடல் நலத்தைப் பேணி காக்க; ஒழுங்கான வாழ்க்கை வாழ முயல்க, தன் வளர்ச்சிக்கான அடித்தளம் இது என்று உணர்;

நெல்சன் மண்டேலா விடுதலை. நிறவெறி அழியட்டும். இருபத்தியாறு வருட சிறைவாசம். சிறுபான்மை இனவெறி ஆட்சியின் அடக்குமுறை மருண்டது. ஏகாதிபத்தியங்கள் மனித உரிமைகள் வாய்கிழியப் பேசினாலும் அவைகளின் வேடங்கள் அம்பலமாகிய வரலாறாகி விட்டன. இவற்றின் இடையே அடக்கப்பட்ட கறுப்பு இனத்தவரின் சளையாத நீடித்த போராட்டம். மக்களின் சுதந்திரம் மீது கொண்ட உண்மையின் பற்று. இவைகள் தாம் நெல்சன் மண்டேலாவின் விடுதலைக்கு வழி வகுத்தது. ஆனால் இவைகள் அர்த்தமுள்ளவையாக இருப்பதற்கான போராட்டத்தை அவர் தொடர்ந்து நடாத்திட இலங்கை உழைக்கும் மக்களின் ஆதரவுகள் என்றென்றும் தொடரட்டும்.

---

O மகக்ளுக்கு முழுமைனதுடன் தொண்டு செய்வது, ஒரு கணமேனும் மக்களிடம் இருந்து நம்மை பிரியாமல் வைத்திருப்பது. எதை செய்தாலும் ஒருவரின் சுயநலத்தின் இருந்தோ அல்லது சிறு குப்பரின் நலனில் இருந்தோ தொடங்காமல், மக்களின் நலனில் இருந்து தொடங்குவது, மக்கள் மீதான தமது பொறுப்பையும் கட்சியின் தலைமை ஸ்தாபனங்கள் பொறுப்பையும் ஒன்றாக கருதுவது:— இவையே நமது தொடக்க புள்ளிபாகும்.

—தோழர் மாதுசேவ்.


---

O யுத்தத்தில் ஆயுதங்கள் ஒரு முக்கியமான அம்சம். ஆனால் தீர்க்கமான அம்சமல்ல தீர்க்கமான அம்சம் மக்கள்அன்றி பொருள்கள் அல்ல, பலப்போட்டி என்பது இராணுவ பலம், பொருளாதார பலம் இவற்றின் மாத்திரமல்ல; மனித பலம் மனவுறுதி இவற்றின் போட்டியுமாகும். இராணுவப் பொருளாதார பலமும் மக்களால்தான் ஒச்சப்படுகின்றது.

—தோழர் மாதுசேவ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு மக்களின் தேசிய விடுதலை போருக்கு துரோகம் இழைத்து இந்தியாவின் எல்லாவித மான ஆலோசனைகளுடனும் இராணுவத்தின் முழு ஆசீர்வாதத்துடன் துப்பாக்கி முனை தேர் தல் மூலம் வடக்கு கிழக்கு மாகாண அரசின் முதல்வர் என அதிகாரபீடம் ஏறியவர்களே பெருமாளும் அவரது கூட்டத்தினரும், தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தை நசுக்க இலங்-கைக்குள் இறங்கிய இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு தமிழீழ மக்கள் மத்தியில் இருந்து இந்திய ஆக்கிரமிப்புக்கு அரசியல் ரீதி யாகவும், இராணுவ ரீதியாகவும் சேவகம் செய்த இந்த தேசத்தை காட்டி கொடுக்க கூடிடவும், இந்திய முதலாளி வர்க்க ஆக்கிரமிப்பு இராணு வத்தின் (I.P.K.F-இன்) கொலை, கொள்ளை, கடத்தல், திட்டமிட்ட அழிப்பு, பாசிட்ஸ் பலாத் காரம் இதன் எல்லாவிதமான பனித உரிமை மீறல்களையும், படுகொலைகளையும் மக்களின் அமைதிக்காக செய்வதாக கூறிய இந்த கூட்டத் தின் தலைவர்களும் IPKF-இன் உயர் அதிகாரி களுடன் சேர்ந்து தம்மிடம் இருந்த வெறித்தனங் களையும் தீர்த்துக் கொண்டனர். ஒரு நாள் ஏதோ ஒரு வெறியைத் தீர்த்த சந்தோஷத்தில் மதுக் கிண்ணங்களுடன் எந்த காலை எங்கே வைப்பது என தடுமாறும் பெருந்தலை பெரு மாளைப் பார்த்து இராணுவ அதிகாரிகள் கூட சிரிக்கின்றனர்.

இந்த கயவாளிக் கூட்டம் தமது வாழ்வை தியாகம் செய்து போராட்டத்துக்கு வந்த ஆயிரக் கணக்கான போராளிகளை காயடித்து உதிரி களாக்குவது, நூற்றுக்கணக்கான அப்பாவி போராளிகளை இயக்க மோதல்களில் பரி கொடுத்தும், பலியெடுத்தும் அழித்தது. வட கிழக்கின் சிவில் நிர்வாகத்தை கையில் எடுத்து அதிகார பலத்தை கொண்டு தேச பக்தர்கள் மீதும் கட்டவிழ்த்து விட்ட அராஜகங்களும், படு கொலைகளும் வரலாற்றில் மக்களின் மனதில் இருந்து நீக்க முடியாதவை.

எந்தவிதமான சொந்த பலமும் இன்றி IPKF-இன் பலத்தில் தங்கி நின்று ஆட்சி நடத்த கனவு கண்ட இவர்கள் இன்று இலங்கை மக்களின் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு போராட்டங் களாலும் தமிழீழ மக்களின் எதிர்ப்பு யுத்தாலும் உலக மக்கள் முன் அம்பலப்பட்டு தோல்வியுற்று பின்வாங்கிக் கொண்டு இருக்கும். இந்தியரசின் நிலை கண்டு இந்த மக்கள் விரோதிகள் தண்ணி அடிக்காமலேயே நிலை தடுமாறுகின்றனர்.